194

d M. 1803. Vol. I—No. 8.

லக்ஷ்மி

10 APR 19

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

SARMA BROS ... MADRAS

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்க மானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளி சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே· கருப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகல.
ரூ. 4½, 5.

கம்பளி ஆஸனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½,
உசத்தி ரூ. 3½ முதல்
5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடிதாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக் கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு	அக. ரூ.	2		10 முழம்	40	இஞ்சு	அக. ரூ.	7
6 ,,	24	,,	,,	2½		16 ,,	40	,,	,,	12
7 ,,	29	,,	,,	3		18 ,,	40	,,	,,	14
8 ,,	40	,,	,,	5½						

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

காசி.



காசி தசாச்வமேத கட்டம் சிவாலயம்.

10 APR 1924

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. | ருத்ரோத்காரிஸூ பங்குனிமீ 1924 மார்ச்சு | இதழ் அ

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி...	363
2.	குழந்தைப் பாட்டு	364
3.	துறவு	365
4.	தொண்டும் தொண்டரும்	370
5.	தமிழர் இயக்கம்	375
6.	தேசபக்தி	379
7.	கேய்க்வார் மஹாராஜா	383
8.	ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	392
9.	ஞாபக விருத்தி	395
10.	விவசாயப் பண்ணை	397
11.	கதைப்பத்தி...	404
12.	முரசொலி	406
13.	ஹாஸ்யத் துணுக்குகள்	409
14.	விசேஷக் குறிப்புகள்	410

சித்திரப் படங்கள்.

காசி தசாச்வமேத கட்டம் சிவாலயம்.

ராவ் ஸாஹிப் **P.** சம்பந்த முதலியா ரவர்கள் **B.A., B.L.,** ஸ்மாள் காஸ் கோர்ட்டு ஜட்ஜ்.

புரோபஸர் ஸி, வி, ரமணன், **F. R. S.**

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன்	...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper)	...	...	ரூ. 10

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 20. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் மூன்றவது வார முடிவில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.

இலங்கை நேயர்களுக்கு!

நமது 'லக்ஷ்மி'க்கு சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டு நமது ஏஜன்று ஸ்ரீமான் **A. M. G.** நாயுடுவை இலங்கைக்கு அனுப்பி யிருப்பதால், நமது சந்தாநேயர்கள் அவருக்கு வேண்டிய உதவி செய்வதோடு புதிய சந்தாதாரர்கள் சேர்த்து கொடுக்கவும் வேண்டுகிறோம். அவர் தற்சமயம் கொழும்பில் இருக்கிறார். யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு 2 வாரத்தில் போவார்

நன்றி கூறல்.

இதுவரை 356 சந்தாதார்களை சேர்த்தனுப்பிய இலங்கை ஸ்ரீமான் A. D. நல்லவேலு அவர்களுக்கும் ஒரு மாதத்துக்குள் 50 சந்தாதார்களைச் சேர்த்தனுப்பிய கோலாலம்பூர் ஸ்ரீமான் பழனிசாமி சேர்வை யவர்களுக்கும் நமது மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறோம்.

மானேஜர்|:
லக்ஷ்மி,

ஓம்

லக்ஷ்மி துதி

சிரணம் செய்யும் மிடிநோயிற்
பட்டுத் தியங்குகின்றீர்!
ஆரணம் சொல்லும் பலகோடி
தெய்வமும் ஆதரித்துக்
காரண காரியம் ஓராது வீணில்
கலங்கன் மினோ
நாரணன் தேவியை நெஞ்சகப்
பூவிடை நாடுமினே!

குழந்தைப் பாட்டு

சண்டி நாய்.

ஸ்ரீமாந் பண்டித S. முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

(ஒரு பையன் தன் சண்டி நாயை ஒரு தறியில் கட்டி அது செய்த குறும்புகளை யெல்லாம் எடுத்துக்கூறிக் கோபிக்கிறான்).

1 ஐயோ! சண்டி நாயே! அகப்பட்டுக் கொண்டாயே
கையில் சிக்கிக் கொண்டால் கருணை காட்டு வாரோ?

2 குறும்பு செய்த தாலே குறுகக் கட்டி னேனே
வெறும் பிலுக்கு வேண்டாம் விடுவ தில்லை நானே.

3 தம்பி தின்னும் அப்பம் தட்டி யேன் பறித்தாய்?
கும்பி காய்ந்த தாலல் கொள்ளை செய்ய லாமோ?

4 மெத்தை மேல் உருண்டாய்! வெண் மயிர் உகுத்தாய்!
சுத்த மான சட்டை தூள் அடையச் செய்தாய்!

5 குதித் துருண்டு சாடிக் கோல மெல்லாம் மாய்த்தாய்!
மிதித்துக் கீரைப் பாத்தி வெட்டை யாக்கி னையே!

6 பாட்டி கையைப் 'பாந்தி'ப் பழுப் பொழுக வைத்தாய்!
வேட்டி சேலை யெல்லாம் வெகுண்டு கீறி விட்டாய்!

7 அக்காள் சிறு வீட்டை அழித்தது நீ தானே?
சொக்க நாதன் பூனை தொலைந்த தும் உன்னாலே.

8 காய்ச்சி வைத்த பாலைக் கள்ளக் குச்சு நாயே!
ஆச்சி வரும் முன்னே அடித்து விட்டாய் நக்கி.

9 பால கிருஷ்ணன் பந்தில் பல்லின் கூர்மை பார்த்தாய்!
மேலை வீட்டு வேலன் விரல் கடித்து விட்டாய்!

10 கூட்டில் நின்ற கோழிக் குஞ்சு போன மாயம்
நாட்டிற் பல பேர்க்கு நகைக் கிடமு மாச்சே!

11 எண்ணி யெண்ணிப் பார்த்தால் இன்னும் கோடி யுண்[டே!
கண்ணி யில் விழுந்தாய் கதறி ஆவ தென்ன?

12 நல்ல புத்தி வந்தால் நான் விடுதல் செய்வேன்.
அல்லை யாகில் வீணே அலைக் கழிந்து போவாய்!

ஓம்

லக்ஷ்மி துதி

சீரணம் செய்யும் மிடிநோயிற்
பட்டுத் தியங்குகின்றீர் !
ஆரணம் சொல்லும் பலகோடி
தெய்வமும் ஆதரித்துக்
காரண காரியம் ஒராது வீணில்
கலங்கன் மினே
நாரணன் தேவியை நெஞ்சகப்
பூவிடை நாடுமினே !

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008

குழந்தைப் பாட்டு

சண்டி நாய்.

ஸ்ரீமாந் பண்டித S. முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

(ஒரு பையன் தன் சண்டி நாயை ஒரு தறியில் கட்டி அது செய்த குறும்புகளை யெல்லாம் எடுத்துக்கூறிக் கோபிக்கிறான்).

1 ஐயோ! சண்டி நாயே! அகப்பட்டுக் கொண்டாயே
கையில் சிக்கிக் கொண்டால் கருணை காட்டு வாரோ?

2 குறும்பு செய்த தாலே குறுகக் கட்டி னேனே
வெறும் பிலுக்கு வேண்டாம் விடுவ தில்லை நானே.

3 தம்பி தின்னும் அப்பம் தட்டி யேன் பறித்தாய்?
கும்பி காய்ந்த தானால் கொள்ளை செய்ய லாமோ?

4 மெத்தை மேல் உருண்டாய்! வெண் மயிர் உகுத்தாய்!
சுத்த மான சட்டை தூள் அடையச் செய்தாய்!

5 குதித் துருண்டு சாடிக் கோல மெல்லாம் மாய்த்தாய்!
மிதித்துக் கீரைப் பாத்தி வெட்டை யாக்கி னாயே!

6 பாட்டி கையைப் 'பாந்தி'ப் பழுப் பொழுக வைத்தாய்!
வேட்டி சேலை யெல்லாம் வெகுண்டு கீறி விட்டாய்!

7 அக்காள் சிறு வீட்டை அழித்தது நீ தானே?
சொக்க நாதன் பூனை தொலைந்த தும் உன்னாலே.

8 காய்ச்சி வைத்த பாலைக் கள்ளக் குச்சு நாயே!
ஆச்சி வரும் முன்னே அடித்து விட்டாய் நக்கி.

9 பால கிருஷ்ணன் பந்தில் பல்லின் கூர்மை பார்த்தாய்!
மேலை வீட்டு வேலன் விரல் கடித்து விட்டாய்!

10 கூட்டில் நின்ற கோழிக் குஞ்சு போன மாயம்
நாட்டிற் பல பேர்க்கு நகைக் கிடமு மாச்சே!

11 எண்ணி யெண்ணிப் பார்த்தால் இன்னும் கோடி யுண்
கண்ணி யில் விழுந்தாய் கதறி ஆவ தென்ன? [டே!

12 நல்ல புத்தி வந்தால் நான் விடுதல் செய்வேன்.
அல்லை யாகில் வீணே அலைக் கழிந்து போவாய்!

துறவு.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வள்ளிநாயகம் எழுதியது.

உலகத்தில் மனிதராய்ப் பிறந்துள்ளார் எய்தப்பெறும் ஆநந்தங்கள் பலவற்றுள்ளும் மேலானது மோக்ஷாநந்தமாகிய பேராநந்தமேயெனப் பலர் கேட்டிருக்கலாம்; சிலர் அறிந்துமிருக்கலாம். கடவுளரது ஸ்வரூபம் இவ்வாநந்தமேயாம். நாமெல்லாரும் கடவுளரின் மக்களென்பது ஆஸ்திகவாதிகள் யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். நாஸ்திகரும் "கடவுள்" என்னும் பதத்தை மறுப்பார்களேயன்றி அஃதாற் குறிக்கப்படும் பொருளை மறுக்கும் ஆற்றலுடையாரலர். என்னையெனின், அவர் வழங்கும் "ஸ்வபாவம்" (Nature) என்னும் பதம் நாம் கூறும் கடவுள் என்னும் மொழியாற் குறிக்கப்படும் பொருளையே உணர்த்தி நிற்கின்றமையானென்க. அவர் கடவுளின் உண்மையை மறுப்பான் துணிந்தது ஆஸ்திகக்கொள்கையார் மந்தபுத்தியுடையோர்க்காய்க் கற்பித்த கடவுளின் ஸ்வரூபத்தைக் கண்டேயன்றி, கடவுளின் மெய்யான ஸ்வரூபத்தை அறிந்தார்பால் கேட்டிருப்பாராயின் அவரது உண்மையைக் கனவிலும் மறுக்கத் துணியார் என்பது நிச்சயம். ஆயின் "ஸ்வபாவம்" என்னும் பதத்தாற் சுட்டப்படும் பொருளுக்கு ஆநந்தமே ஸ்வரூபமென அவர் அங்கீகரிக்கவில்லையேயெனின், அதனை அவர் நன்கு விசாரணை செய்யாக் குறையாலென்க. இது நிற்க, நாம் கடவுளரின் மக்களாகவே, நமது ஸ்வரூபமும் அவர் ஸ்வரூபமேயர்கின்றது. என்னையெனின், காரணகாரியங்கள் தோற்றத்தில் வித்தியாஸமுடையனவேயன்றிப் பொருளில் வேறுபாடுடையனவல்லவாதலினென்க. ஆகவே, நமது வடிவமும் ஆநந்தமேயாம். ஆயினும், காமமாதியாகிய ப்ரதிபந்தங்களால் அது விளங்குகின்றதில்லை. ஏனெனின், மனமானது அவைகளால் ஸதா ஸஞ்சலத்தையடைகின்றது, கடத்திலிருக்கும் ஜலத்தின் சலனத்தால் அதிற் ப்ரதிபிம்பியாநின்ற சந்த்ரபிம்பம் நன்றாய் விளங்காததுபோல் மனதின் சலனத்தால் ஆநந்தமும் விளங்குதலின்று. காமமாதிகளோ, உலகப் பொருள்களின் தோற்றத்தாலுண்டாம் மயக்கத்தினின்றும் எழுகின்றன. அம் மயக்கமோ அப்பொருள்களின் ஞானத்தால் மாத்திரம் நிவர்த்தியாகத் தக்கது. அந்த ஞானமும் விசாரணையால் ஜநிக்கத் தக்கது. மாயை என்னும் இருளால் மூடப்பட்டிருக்கும் இவ்வுலகின்கண் ஞானமென்னும் ஆதித்தன் உதித்து, அதிலுள்ள பொருள்களின் உண்மை நிலையைத் தோற்றுவிக்கும் வரை

விசாரணை என்னும் கைத் தீபமேனும் கொண்டு செல்லாராயின், மாந்தர் பூத இருளிற் கட்டையைக் கண்டு கள்ளனெனக் கொள்ளுதற் போல யாவற்றையும் விபரீதமாகவே கோட நேரும். விபரீதமாகக் கோடவே அது காரணமாய்ச் செய்யும் ஸகல ப்ரவர்த்திகளும் வ்ருதாவாம். ஆகவே, வாழ்க்கை பய னற்றதாய் முடியும். அத்தகைய பயனற்ற வாழ்க்கையை வாழ்க்கையெனக் கூறுர் விவேகிகள். ஆதலின், நமது வாழ்க்கை பயன் பெறுமாறு நாம் யாவரும் அவ்விசாரணையிற் ப்ரவேசித்தல் அத்யா வச்யகம். அத்தகைய விசாரணையில் தேர்ச்சியடைவான் தந்தை, தாய், மனைவி, புத்ரன் என்னும் உயிர்ச் சார்பையும் மாடு, மனை, வீடு முதலிய பொருட்சார்பையும் விட்டு நீங்குதல் இன்றி யமையாதது. ஏனெனின், மனம் பற்றுதற்கேதுவாய் இப்பொருள்களின் மத்தியில் ஒருவன் எத்தனை கால மிருக்கின்றுனே அத்தனை காலமும் அவைகளைப் பற்றிய விசாரங்களால் அவன் மனம் புண்படுத்தப்பட்டுத் தத்துவ விசாரணைக்கு யோக்கிய மில்லாததாகின்றதா லென்க. அவைகளைப் புறத்தில் விட்டு நீங்காது அகத்தில் இச்சையை யொழித்திருப்போ மெனின், அஃது பொருளையே பொருளாய் க்ரகித்த மெய்ஞ் ஞானிகளுக்கு ஸாத்யமேயன்றி ஏனையோர்க்கு அஸாத்யமேயாம். விசாரணையிற் புகுவாரை அத்தகையாரென்றுரைப்பவர் யாவர்? எவருமின்றுதலின் ஸாதகர் யாவர்க்கும் அங்ஙனம் விஷயங்களுக்கு மத்தியில் இச்சையை யொழித்திருத்தல் இயையா தென்க. ஸாதகருள் அத்தன்மைத்தாய வலியுடையாரின்றோவெனின், பொதுவாய் இன்றென்றே கூறலாமென்க. உளராலோவெனின் அவர் விலக்கேயா மென்க. பசியை அடக்க விரும்பு மொருவன் ஆகாரம் கிடையாத விடத்தில் இருப்பானுயின் அப்பசியை அவன் ஒருவாறு அடக்குதல்போலும், அவனே சுவையுள்ள பதார்த்தங்களும் மதுரமான பழங்களும் இருக்குமிடத்தில் இருப்பானுயின் அப்பசியை அடக்குதல் கூடாததுபோலும் இந்திரியங்களுக்கு உணவாகும் விஷயங்கள் கிடையாத விடத்திலிருந்து இச்சையை விலக்குதல் ஸாத்தியமாயும், விஷயங்களுக் கிடையி லிருந்துகொண்டு அதனை யொழித்திருத்தல் ஸாதாரணமாய் அஸாத்யமாயு மிருக்கின்றது. மனுகாயத்தில் தோன்றும் பொருள்களைப் பார்க்கிலும் பூதாகாயத்தில் தோன்றி இந்த்ரியங்களோடு ஸம்பந்தப்படும் பொருள்கள் மனதை இலகுவாய் வசீகரிக்கும் ஆற்றலுடையனவா யிருக்கின்றன. அதுபற்றியே மோக்ஷத்தில் இச்சையும், விஷயத்தில் வெறுப்பு முடையாரேனும், மேற்குறித்த பொருள்களைவிட்டு நீங்கும் ஊக்கம் வரப்பெறுதார் அவற்று லுண்டாகும் துக்கத்தை யோர்ந்தவராய்க் கவலையுறுவா ராயினுர். தத்வ விசாரணையிற் புகும் மனமானது மிக்க ஏகாக்ரமாயிருக்க வேண்டுதல் பற்றி ஸதா ஸாஞ்சல்யத்தைக் கொடுத்தற்கு ஹேதுவாயிருக்கும் இருவகைச் சார்புகளையும் விட்டு நீங்குதல் ஆவச்யகமே. ஆயினும், துறவென்பது உலகப்பொருள்களை தேசத்திலோ, காலத்திலோ, உடலால் விட்டு நீங்குதலோ டமையாது. அமையுமெனின், தூரதேசத்திற் சென்றிருக்கும் சுற்றத்தாரையும்,

ப்ராரப்த கர்மத்தின் முடிவால் இவ்வுலகினின்று நீங்கும் மனைவியை யும் கோர்ட்டு வியாஜ்யத்தால் இழந்த செல்வத்தையும் ஒருவன் துறந்தவனுகக் கொள்ளவேண்டி வருமென்க. பின், துறவின் முக்ய லக்ஷணம் யாதெனின்,

"எத்தாலுடல மசைகின்ற தெதுதான் பிறவிக்கருமத்தின்
வித்தாய் நின்றததுவிட்டால் வேந்தா வெல்லாம் விட்டனவாம்."

(இதன் பொருள் :—யாதினுற் சரீரம், ஸஞ்சரிக்கின்றதோ, யாதொன்று ஜநநத்திற்கும் கருமத்திற்கும் விதையா யிருந்ததோ, அதனை விடுவையாயின் அரசனே ! சகல த்யாகமாம்) என்று ஞான வாசிட்டத்தில் கூறியிருக்குமாறு பவக் கன்மங்களுக்கு வித்தாய் மரத் தை யசைக்கின்ற வாயுவைப்போல சரீரத்தை யாட்டுவிக்கும் மனதை விட்டு விடுவதே யாம். இஃது மெய்ஞ்ஞானத்தா லன்றி ஸித்திக் காததால் அது பூர்த்தியடையும் பொழுதே துறவும் பூர்த்தியடை கின்றது. உலக விஷயங்களில் உண்டாகும் வெறுப்பால் ஒருவன் ப்ரதமத்தில் புறப் பற்றுக்களை யொழிக்கின்றுன். அவ்வெறுப்புக் கேது அஞ்ஞானமே யன்றி மெய்ஞ்ஞான மன்று. என்னை? அது பொருளல்ல வற்றைப் பொருளாகக் கொண்டதி னின்றும் எழுந்த தாகலின். அன்றியும் எப் பதார்த்தத்திலேனும் ஒருவனுக்கு வெறுப் புளதால் அதனை அவன் துறந்தவனுகக் கொள்ளுதல் தவறு. அப் பதார்த்தத்தில் விருப்புடையோனுக்கும் அதற்கும் எத்தனை ஸம்பந் தம் உளதோ அத்தனை இவனுக்கும் அதற்கும் உளவே உளது. வெறுப்பும் விருப்பும் உயிர்களை விஷயங்களோடு பந்திக்கும் வலிமை யில் ஒரே தன்மை யுடையன வாம். பொருளைப் பொருளாகக் க்ரகிக் கும் நுண்ணறிவாகிய கட்கத்தா லன்றி மற்றெதனுலும் இவ்விரு பாசங்களும் சேதிக்கப் படத் தக்கன வல்ல. இந்நுண்ணறி வுடை யோர் மெய்ஞ்ஞானிகளே யாதலின் துறவின் முக்ய லக்ஷணமும் மெய்ஞ்ஞானிக ளிடத்ததே யாம். ஆகவே, மெய்ஞ்ஞானிகளின் லக்ஷணமே துறவின் முக்ய லக்ஷண மாகின்றது.

"இல்லறம் பொருளென இருந்து காமிய
அல்லல்சேர் வாழ்க்கையின் அமிழ்ந்து நிற்பினும்
எல்லையில் ஞான இன்பத்தை எய்தியே
புல்லியும் புல்லிடா திருப்பர் புண்ணியோர்."

என்றுர் சிவஞான வள்ளலார். ஆதலின் எப்பொருள்களுக்கு மத்தி யிலிருப்பினும், எத்தகைய ப்ரவர்த்தி செய்துவரினும் அவற்றில் விருப்பு வெறுப்பின்றி, அஃதாவது பற்றுதல் விடுதலின்றித் தாம் செய்யவேண்டியதாய் நேரிடும் கடமைகளைச் சற்றும் வழுவாது சரி யான விதத்திற்செய்து வருபவர் ஞானிகளெனப்படுவார். ஸாதாரண ஜநங்கள் அவரை யுணரார். அஃதோர் ஆச்சரியமுமன்று. எதனு லெனின், அவர்கட்கு நுட்ப அறிவு இன்றுதலி னென்க. ஆயினும்,

எவரும் எளிதி லுணருமாறு ஞானிகளுக் கின்றியமையா லக்ஷணத்தைக் கூறுவாம். அஃதாவது:—இராகத்வேஷம் அற்றிருத்தலாம். இவ் லக்ஷணம் உடையவர் எத்தனை பெரியோராய்த் தோன்றினும் அவரை ஞானி யன்றெனக் கூறுது கூறலாம். இராக த்வேஷங்களை யாதாரமாக வைத்து ஞானிகளைக் காணிக்க வேண்டி யிருத்தலின் அவற்றைப்பற்றிய உண்மையான அறிவு எவரிடத்து மிருக்க வேண்டுவ தாவச்யகம். அவரைக் கணித்தலெற்றுக்கெனின், அவரது தன்மையை உணர்தலினுல் அவரையடுத்து மெய்வழிநாடி உய்நிலை யடைதற்கு ஹேதுவாயிருத்தல் பற்றியென்க. இராகம் எனினும் விருப்பு, இச்சை எனினும் ஒக்கும். த்வேஷமெனினும் வெறுப்பெனினும் பொருந்தும். ஒருவனை ஓர் பொருளினிடத்தில் இச்சையுடையானெனக் கூறவேண்டுமாயின் அவனுடைய இந்த்ரியங்களுக்கோ, மனதிற்கோ அப்பொருள் ப்ரத்தியக்ஷ மாகுங்காலெல்லாம் அதனை யடையவேண்டும் என்னும் அவாவும் அதையநுஸரித்து ப்ரவர்த்தியும், அப்ரவர்த்தியால் பொருள் ஸித்திக்கவில்லையாயின் ஆருத் துக்கமும் உண்டாதல் வேண்டும். இவற்றில் கடைய தின்றுயின் இச்சை யாகாது. ஒருபொருளை யடையவேண்டுமென்னும் அவாவும் அதற்காம் ப்ரவர்த்தியு மிருந்தும் ஸித்திக்காதவிடத்துத் துக்கமில்லா திருத்தல் ஸ்வயநயம் துறந்த மெய்ஞ்ஞானிக்கே கூடும். அன்றியும் எவரும் துக்க நிவர்த்திக் காகவே ஸகல ப்ரவர்த்திகளையும் செய்கின்றுரே யன்றி மற்றெதற்காகவு மன்று. ஆதலின், துக்கத்தைக் கொடுக்காத இச்சை இச்சையாகாது. ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் ப்ரசங்க காலங்களிற் சில விடங்களில் பட்டு வஸ்திரத்தால் தைக்கப் பெற்ற அங்கரக்காவைத் தரித்துக் கொண்டிருந்ததினுல் அவரைப் பற்றுடையார் போன்று குறிப்பித்து, அவரிடத்தில் துறவியின் லக்ஷணம் இன்றெனச் சில கிறிஸ்தவர்கள் எழுதியிருந்ததைப் பலரும் பார்த்திருக்கக் கூடும். அது முற்றிலும் தவறுன அபிப்ராயமென்று யாம் மேல் விவரித்த விஷயங்களால் நன்குய் விளங்குமென நம்புகின்றேம். இதுபோ லுள்ள விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு, கிறிஸ்தவர்கள் மாத்திரமன்று ஏனையோரும் ஞானிகளையுணர முயற்சிக்கின்றுர்கள். அது எங்ஙனம் கூடும்? இச்சையின் லக்ஷணம் இஃதென அவர் நன்குணர்ந்து கொள்வாராக. இதுபோலவே த்வேஷமும் க்ரஹிக்கத் தக்கது. ஒருவனை ஒருபொருளில் வெறுப்புடையானெனக் கூற வேண்டுமாயின், அவனுடைய இந்த்ரியங்களுக்கோ மனதிற்கோ அப்பொருள் ப்ரத்தியக்ஷ மாகுங்காலெல்லாம் அதன் கெடுதியில் விருப்பமும், அதனைப் பலிப்பிப்பதற்குரிய ப்ரவர்த்தியும், அப்ரவர்த்தியின் முடிவு ப்ரதிகூலமா யிருப்பின் துக்கமும் உண்டாதல் வேண்டும். இவற்றிலும் கடைய தின்றுயின் த்வேஷமாகாது. ஒரு பொருளைக் கெடுக்க விருப்பமும் அவ்விருப்பத்தை நிறைவேற்றுதற்குரிய ப்ரவர்த்தியு மிருந்தும் அஃது பலிக்காத விடத்துத் துக்கமில்லா திருத்தல் பொது நன்மையின் பொருட்டுத் தனது கடமையைச்செய்து முடிக்கவேண்டு மென்னும் எண்ண

முடைய ஞானிக்கே பொருந்தும். அன்றியும் இந்நிலையில் எவரும் அவாவும் துக்க நிவர்த்தியும் ஸித்தித்திருக்கின்றது. ஆதலின், துக்கத்தைக் கொடுக்காத் த்வேஷமும் த்வேஷமாகாது. இவ் ராகத்வேஷங்கள் மனோநிலையைச் சார்ந்தன வாகலின், தோற்றத்தை வைத்து நிதானிக்க லாகாது. நிதானிக்கலா மெனின், தனது புத்திரி விளையாடிக் கொண்டிருக்கும் பாவையின்மேல் ப்ரியம் வைத்தான் போல் தனக்குவேண்டு மெனக் கேட்டிரங்கும் தகப்பனை அப்பாவையின்மேல் விருப்பமுடையா னெனவும், தனது ஸ்ஹோதரன் தீயவொழுக்கத்திற் செல்லுதலினால் அவன்மேற் கோபங்கொண்டு அவனை ஸிக்ஷிக்கும் தமையனை ஸகோதரன்மேல் த்வேஷமுடையா னெனவும் கூறவேண்டி வருமென்க. உண்மை இங்ஙன மிருத்தலின், துறவிகளை யுணர்தல் அவரது மனோ நிலைமையின் தன்மையை மிக்க நுண்ணிய விவேகத்தால் க்ரகித்தலி னின்றே யாம்.

இதுவரை யாம் கூறிவந்ததி னின்றும் துறவின் முக்ய லக்ஷணம் ராகத்வேஷங்களை விட்டிருத்தலே யாமென்பது இனிது விளங்கும் மனதைத் துறத்த லென்பதும் இஃதேயாம். இந்நிலை யொன்றே பேரானந்தத்தை யளிக்க வல்லது. இதனை யறியாது மாந்தர் விஷயங்களினின்றும் ஸுகம் அடையலா மெனக் கருதி அந்தோ! விளக்கொளியைத் தேடிச்செல்லும் விட்டிலாய்த் திரிகின்றனரே! என்ன பேதமை! அவற்றை யெல்லாம் துச்சமெனத் தள்ளி

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றி
வழிபடுதல் வல்லுதல் அல்லால்—பரிசழிந்து
செய்யீரோ என்னினும் என்னும் சொற்கின்னாதே
பையத்தான் செல்லும் நெறி.

(நாலடியார்)

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்.

(திருக்குறள்)

தொண்டும் தொண்டரும்

ஸ்ரீமாந் ரா. அநந்தகிருஷ்ணன் எழுதியது.

மானிட வாழ்க்கை யாகிற ஓர் பெரிய ரதத்திற்கு அச்சாணி போன்றது தொண்டு. அச்சாணியின்றி ஓடும் ரதம், பூட்டுப் பூட்டாகக் கழன்று சிதறுண்டு தாழ வீழ்ந்து சின்ன பின்ன மாவது போல, தொண்டு இன்றிய வாழ்க்கை நலிந்து இழி வுற்று நரகப் படுகுழியில் வீழ்ந்து இடர்ப் பட்டுத் தேயும். இன்னும், தொண்டு வாழ்க்கையின் விளக்கு என்று சொல்லலாம். மானிட வாழ்க்கை முழுவதற்கும் ஒளி கொடுத்து, அதன் சம்பந்தங்கள் அனைத்தையும் விளங்க வைப்பது தொண்டு ஒன்று தான். மனித வாழ்க்கைக்கு ஜீவகலையாகிற, ஆத்ம தேஜஸாகிற, சுதந்தரம் மலர்வதும் தொண்டின் மகிமையினாலே தான். தொண்டினைத் தழுவி நிலவாத வாழ்க்கை, ஜீவன் அற்ற கட்டை; ஆத்மா அகன்ற சடம்; சுதந்தரம் மிளிராத நரகம் ஆகும்.

மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியமும் தொண்டு என்றே பாவிக்கப்படும். ஒவ்வொரு செயலும் தொண்டு தான். நல்லன, தீயன, தன் நலத்தன, தன் நலம் மறுத்தன ஆகிய சகல செயல்களும் தொண்டு தான் எனல் ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆழ்ந்து ஆராய்வோருக்கு இதில் ஆச்சரியம் ஏதும் தென்படாது. கோடையையும் மாரியையும் அளித்த கடவுளின் செயலை அறம் என்பதோ; மறம் என்பதோ? அறத்தின் பால், நன்மையின்பால் பட்டன வெனின், நேர் எதிரான இவ்விரு பொருள்களும் எங்ஙனம் ஒரே தன்மைத் தான செயல்களாகும்? இதன் உண்மையை நன்கு ஆராய்வோருக்கு மேலே, சொல்லியபடி எல்லாச் செயல்களும் தொண்டு தான் என்பதன் பொருளும் நன்கு விளங்கும். கோடையின் தாங்கொணாத சூடு நமக்குக் கஷ்டத்தையே கொடுப்பதாக இருந்தாலும் அதனுள்ளும் ஒரு பெரிய நன்மையையே கடவுள் 'பூத்து' புதைத்து வைத்திருக்கிறார். அதே போல தீட்டிய பார்வையுடைய கண்களைப் பெற்றவர்கள், ஒவ்வொரு வினையும் வினைசெய்வானை மாத்திர மன்றிப் பிறரையும் அடைகிறது எனக் கண்டு கொள்வர். எவரும் அணுக முடியாத ஒரு பெரிய மலையின் மத்தியில் இருந்து கொண்டோ, அல்லது மிருகங்கள் கூட நுழைவதற்கு அஞ்சும் படியான தோர் பயங்கரமான, அடர்ந்த காட்டின் ஊடே இருக்கும் ஒரு சிறிய குகையில் இருந்து கொண்டோ ஒருவன் எவ்வித ரகசியமான காரியத்தையும் செய்யட்டும். அதுவும் பிறரைப் பாதியாமல் விடா. நாம் எத்தனையோ காதம் நடந்தாலும் ஓடினாலும், பூமியின் ஆகருஷண சக்தியி னின்றும் தப்பி ஓட முடியாதது போலவே, நம்முடைய செயல்களும் மானுட சமாஜத்தைப் பாதியாமல் நில்லா.

தோண்டும் தோண்டரும்

பிரிய முடியாத வாறு பூமியுடன் நாம் பிணை பட்டிருப்பது போலவே, இவ்வுலகத்தில் உள்ள மாந்தர் அனைவருடனும் நாம் பிணைபட்டு நிற்கிறோம். இவ்வுலகத்திலுள்ள மாந்தர் அனைவரையும் ஒன்றாகக் கோக்கப்பட்ட ஒரு சங்கிலி மாலைக்கு ஒப்பிடலாம். இச்சங்கிலியில் ஒரே ஒரு இணையை மட்டும் பாதிப்பதாயும் பக்கத்தில் உள்ள எதனையும் பாதியாத தாயும் இருக்கக் கூடிய காரியம் எதனையும் நாம் செய்ய முடியாதன்றோ? அவ்வாறே பிறரைத் தொடாத செயல் எதனையும் ஒருவரும் செய்ய முடியாது. என்றாலும், வினைகளைக் கொள்ளத் தக்கன, தள்ளத் தக்கன வெனப் பாகு படுத்தி யிருப்பதெல்லாம் பின்வரும் காரணத்தை உத்தேசித் தல்லாமல் பிறிதொன்றில்லை. ஆதியில் மனிதர் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குத் தம் சொந்தக் கால்களாலேயே நடந்து சென்றிருப்பர். பிறகு எருது வண்டிகளைச் செய்து, அவற்றில் சவாரி செய்து ஓரிடத்தினின்றும் பிறிதொன்றுக்குச் செல்ல லானார்கள். அப்பால், இருப்புப் பாதைகளைப் போட்டுக் கொண்டு இன்னும் வேக மாகச் செல்ல லாயினர். ஆகாய விமானம் சர்வ சாமானிய மாகப் போய் விட்டதனால் இருப்புப் பாதையினும் பார்க்க இன்னும் வேகமாய்ச் செல்வர். இப்பொழுது, காளைவண்டியில் ஏறிச் செல்லக் கூடிய இடத்துக்கு கால் நடை தள்ளத் தக்க வினையாகும். அப்படியே இருப்புப் பாதையில் செல்ல வேண்டிய இடத்துக்கு காளை வண்டியும் கால் நடையும் தள்ளத் தக்கன வாம். ஆகாய விமானத்தில் ஏறிச் செல்வதை விடுத்து இருப்புப் பாதை மூல மாகவோ, காளை வண்டி நடைகளாலோ செல்வதும் தள்ளத்தக் கனவே யாகும். என்றாலும், ஒரு வாகனமும் இல்லாத பொழுது கால் நடையே எல்லா இடங்களுக்கும் கொள்ளத் தக்க தாக இருந்தது. பிறகு வண்டி கொள்ளத் தக்க தாயிற்று; அடுத்தது இருப்புப் பாதை; அப்புறம் ஆகாய விமானம். ஆதலால் எதுவும் எப்பொழுதும் கொள்ளத் தக்க தாகவோ, அல்லது தள்ளத் தக்க தாகவோ இருக்க முடியாது. அவ் வக்கால தேச வர்த்தமானங்களை ஒட்டி கொள்ளத் தகுவனவும் தகா தனவும் மாறு பட்டுக் கொண்டே போகும். ஆதலால் இன்றைய நிலையில் எவ்வினை செய்தால் சிரேஷ்ட மான பலனைத் தருமோ, அதனையே, தோண்டாகப் பாவித்து ஏனைய வற்றை அங்ஙனம் கருதாது விடுகின்றனர். நமது முன்னோர்கள், தோண்டினைப் பொதுவில் ஐந்து விதங்களாக வகுத்துச் சென்றிருக் கின்றனர். ஆத்ம யக்ஞம், பிதிர் யக்ஞம், பூத யக்ஞம், நர யக்ஞம், தேவ யக்ஞம் என்பன ஐந்தும். இவற்றைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.

ஆத்ம யக்ஞம்:—ஒருவன் தன் வளர்ச்சியின் பொருட்டும் மனம்,மெய், ஆன்மா, இம்மூன்றன் வளர்ச்சியின் பொருட்டும் தானே செய்து கொள்ள வேண்டிய கடன்கள். காயசித்தி, வாக் சித்தி, யோக (மனம்) சித்தி, ஞான சித்திகள் பெற்றவராக ஆதலே

இதன் சம்பூரண மான முடிவு. சரீரத்தைத் திடமாகவும், நோயணுக முடியாத வாறும், சுத்தமாகவும், எதனிலும், தாழ்வுருத வலிமையை யுடைய தாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். தன் தாய் மொழி ஒன்றிலேயே, தாம் விரும்பிய அனைத்தையும் அழகுபெற அமைத்துச் சொல்லும் திறனைப் பெற வேண்டும். சிறுமை களுக்கும், அடிமை களுக்கும் மனத்தில் இடங்கொடாமல், இவைகளைக் கண்டவிடத்து அகற்ற எழும் தன்மைத் தாக மனத்தை வைத்துக் கொள்ள வேண்டும். கடவுளையும் தனக்கு இயமானனுய்க் கொள்ளாது தானே கடவுளாய் நிற்கும் முத்திப் பேற்றினையும் பெற வேண்டும்.

பிதிர் யக்ஞம் :—தன் மூதாதையருக்குச் செய்ய வேண்டிய கடன்கள். மூதாதையர்கள் இருந்து வாழ்ந்து வந்த தெல்லாம் தேயத்தின் கண்ணே ஆதலால், ஒவ்வொருவனும் தன் தாய் நாட்டுக் குத் தான் இறுக்க வேண்டிய கடனைத் தவறின்றிச் செலுத்தி விட வேண்டும். உண்மையான தாய் தந்தையர் கடன், இதுவே யன்றி, சிரார்த்தாதிகளும், திதிகளும் ‘ஆராதனைகளும்’ ஆகாது. எத்தனை பிறப்புகள் இதற்கு முன்னர் எடுத்து இருக்கிறோம்? இனியும் எடுக்க இருக்கிறோம்? அப்படி யிருக்க, நம்மைப் பெறும் தாய் தந்தையரை மூன்று தலை முறைகளுடன் மட்டும் நிறுத்திக் கொள்வது முறை யாகாது. நம்முடைய தாய் தந்தையர்கள், பெரும்பாலும் இந்நாட் டிலேயே பிறந்து வாழ்ந்திருப்பார்க ளாதலால் அவர்களை ஈன்ற இந் நாட்டின் தருமத்திற்கும், சுதந்திரத்திற்கும், சிறப்புக்கும் பழுதுவா ராமல் காப்பதே உண்மையான பிதிர் யக்ஞமாகும். தவிர பிதிர் யக் ஞத்தை இன்னும் ஓர் இடத்தினின்று பார்க்கலாம். ‘தந்தையே மகனுகப் பிறக்கின்றுன்’ என்று வேதங் கூறுகின்றது. ஆத லால் தந்தைக்குக் கடன் இறுப்பவர்கள் மகனுக்கும் இறுத்தே தீர வேண்டும். இதை மாற்றிச் சொல்ல மகனுக்குத்தான் ஆற்றித்தீர வேண்டிய கடன்களைக் குறைவற முடிப்பவர்கள் தந்தையருக்குக் கடன் செலுத்தியவர்க ளாவர். ஆதலால் ஒவ்வொருவனும் தன் மகனுக்குத் தான் செய்ய வேண்டிய கருமங்களை நன்கா ராய்ந்து செய்ய வேண்டும். தன்மகனை சபையின் கண்ணே முதலில் இருக்கும்படி செய்வது தான் ஒரு தந்தை மகனுக்குச் செய்யக் கூடிய உதவி. கல்வி பயிலா தவர் ஓர் அறிஞர் குழாத்தில் முதன்மையான இடம்பெற முடியாது. ஆகவே, கல்வி, அறிவைப் புகட்டும் கல்வி, தம் மக்கள் பெறுகிறுர்களா என்று ஒவ்வொரு வரும் பார்க்க கடமைப் பட்டிருக்கிறுர்கள். இன்று நூற்றுவரில் தொண்ணூற்றிருவர் தற்குறிகளா யிருப்பதி லிருந்து, இக்கடமை எவ்வாறு நிறை வேற்றப் பட்டு வருகிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். தன் பிள்ளையைத் தற்குறியாக வளர்க்கும் ஒவ் வொருவனும் தன் மூதாதையருக்குத் தன் குலத்தினருக்குத் துரோ கம் செய்தவனுகிறுன். நிற்க.

தோண்டும் தோண்டரும்

பூதயக்ஞம் :—பூதங்கள் என்பதில் பஞ்ச பூதங்களும், மிருகாதிகளும் சேர்க்கப்படும். பஞ்ச பூதங்களுக்கு நாம் செய்யும் யக்ஞம் என்ற பேச்சு இன்று பரிகாசத்துக் கிடமாகும். உண்மையில், இதனை நாம் பரிகசித்ததனால் தான் நமது நாடே, நமது வாழ்க்கையே, உலகோரின் பரிகாசத்துக்கு இடையாயிற்று. பஞ்ச பூதங்களுக்கு நாம் செய்யவேண்டிய யக்ஞம் உளது. அரணியைக் கடைந்து நெருப்பை எடுப்பதுபோல இந்தப் பூதங்களைக் கடைந்து இவற்றில் உள்ளடங்கி யிருக்கும் மகத்தான சக்திகளை விடுவிக்க வேண்டும். அப்படி உடனே செய்யாத பட்சத்தில் உலகத்தில் பரவி வரும் புதிய நாகரீக வெள்ளம் நம்மை அடித்துக்கொண்டு போய், சர்வ நாசமாகிற சமுத்திரத்தில் ஆழ்த்திவிடும். அதாவது, தற்போதைய முறைப்படி விக்ஞானக் கலைகளைப் பயின்று வளர்ப்பது பூத யக்ஞத்தின் முக்கியமானதோர் அம்சமாகும். அடுத்தது மிருகாதிகளைப் பட்சிகளைப் பற்றியது. பண்டைக் காலத்திய பாரத நாட்டில் ஆங்காங்கே தாமரை மலர்போல பூத்திருந்த ஆசிரமங்களில், மான்கள், பசுக்கள், மயில்கள், குயில்கள், கிளிகள், ஆடுகள், நாய்கள் குதிரைகள் போன்ற வீட்டுப் பிராணிகள் கூட்டம் கூட்டமாக வந்திருக்கும், வயிறுர மேய்ந்திருக்கும் ஆதலால், இன்று ஊர் மந்தைகளிலும், காட்சி சாலைகளிலும் காணப்படும் இவற்றின் நிழல்களைப்போல எலும்பெடுத்து, ஏங்கியிரா. பசுவைக் கொலை செய்கிறார்கள் என்று முகம்மதியர்கள் மீது ஹிந்துக்கள் பாய்வர். ஆனால், தாம் தமது வீட்டிலுள்ள பசுக்களைச் சரியானபடி பரிபாலிக்காது அவற்றைப் பட்டிணிபோட்டு சித்திரவதை செய்வர். இந்நாளில் மேலை நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் புகைந்துவரும் பல இயக்கங்கள் மிருகங்களிடத்து அன்பு காட்டும் சங்கங்கள், அவற்றை இம்சை செய்யாமல் தடுப்பது, புலால் மறுத்தல்—முதலிய பல இயக்கங்கள் இந்த பூத யக்ஞ தருமத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. கர்னாடகப் பிராமணர்கள் வீட்டில் இன்றும் காக்கைகளுக்குச் சோறு அளிக்கப்படும். ஆனால் ஆங்கிலங் கற்ற பெரியோர்களுக்கு இதெல்லாம் அவசியமில்லை போலும்; கட்டோடு விட்டு விட்டார்கள். ஆங்கிலங் கற்றவர்கள் மானுடப் பதவி இழந்து தேவர் பதவி எய்து வரன்றோ ?

நரயக்ஞம் :—மனிதர்களுக்குச் செய்யவேண்டிய கடன்கள். தன்னைச் சூழ்ந்துள்ள தன் சகோதரருடைய முன்னேற்றத்திற்காக ஒரு சிறு துரும்பையும் எடுத்துப் போடாதவன் வாழ்க்கை பயனற்றது ! அவ்வாறு வாழ்பவன் மனிதன் என்னும் பெயருக்கே தகுதியுடையவன் அல்லன் என்று 'திந்தாலர் துரை' கூறுகிறார். தன் நலத்தைப் பேணும் வழியான் பிறர் நலத்துக்கு ஹானி விளைவிப்பான், முடிவுநாளில் கடவுளுக்கு என்னபதில் இறுக்கப் போகிறான் ? பரம் பொருள் நம் மனைவருக்கும் வாய்த்த ஓர் தந்தையாதலின், உலகிலுள்ள சகல மனிதர்களும் சகோதரர்களாகிறார்கள். எனவே அவர்களுடைய பங்கை நாம் ஒளித்து, நமக்கே வைத்துக்

கொண்டு விடுவதாயின், திருடராய், வஞ்சகராய், துரோகிகளாய்ப் போய்விடுவ மன்றோ? ஒவ்வொருவனும் தன் சகோதரருக்குச் செய்ய வேண்டிய கடன்களை மலர்ந்த முகத்துடனே செய்து வருவானாக. அப்படிச் செய்யத் தலைப்பட்டு விட்டால், மனப் பூருவமாகச் செய்யத் தலைப்பட்டு விட்டால், உலகத்தில் ஏகாதிபத்தியங்கள், யுத்தங்கள் வெடிக்கவே மாட்டா; ஏகாதி பத்தியங்கள் உள்ளவரை, உலகத்தி னின்றும் யுத்தம் மறையா தென்பதை ஒவ்வொருவரும் நினைவி லிருத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவில் காணப்படும் ஜாதி வேற்றுமை இக்கடமைகளை மறுக்க வெழுந்தன வல்லவா என்போ ருக்கு, சமாஜத்தில் சேர்த்துக் கொள்ளப்படாது ஒதுக்கி வைக்கப் பட்டோருக்கு ஒவ்வொரு மேல்ஜாதியான் வீட்டிலும் தினந்தோறும் அன்னம் அளிக்கப்பட்டு வந்திருப்பதை உன்னிப் பார்க்கச் சொல் வேன். 'வாயஸபலி' இடப் படுவதுபோல, நரபலியும் ஒவ்வொரு பிராமணன் வீட்டிலும் அவன் சாப்பிடுவதற்கு முன்னால் இடப்பட்டு வரவேண்டு மென்பது விதி*

முன்னர் அப்படியே செய்யப்பட்டது. இன்று நின்று போய் விட்டது; உண்மைதான். என்றாலும், வருணாசிரம தருமம், ஒதுக் கப் பட்டவர்களை அடக்கி ஒடுக்கி யாளப்பிறந்தது என்று யாரும் சொல்லமுடியாது எனத்தெரிவித்துக்கொள்வேன். இன்று ஹிந்துக் கள் செய்யவேண்டிய ஒரு மகத்தான நரயக்ஞம், தீண்டாமையை ஒழித்தல்; ஜாதி த்வேஷங்களை, ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் ஆகும்.

தேவருக்கும் மேற்சொல்லிய நான்கினையும் அகங்கார நிலையில் அல்லாமல் யோக நிலையினின்று செய்வதே தேவ யக்ஞமாகும்.

இவ்வாறான பிரிவுகளை யுடைத்தாயிருந்தாலும், அவ்வக்கால தேசவர்த்தமானங்களுக்கேற்ப அவசியம் செய்யவேண்டிய தொண் டினைச் செய்வதே உண்மையான தொண்டாகும். அத்தொண்டு இன்று தேசத்தொண்டேயாகும். ஆதலால், இன்று தொண்டு என்று பேசுவதனால் தேசத்தொண்டு எனவே பொருள் கொள்ள வேண்டும். ஆகலான் அடுத்த வியாசத்தில் தொண்டரைப் பற்றி ஆராயுங்கால் தேசத்தொண்டரைப்பற்றிப் பேசுவேன்.

---

* இவ்விதி அநுஷ்டானத்தில் கையாளப்படாது போகக் காரண மென்ன? தற்காலத்திய நிலைமையில் அவ்வேற்பாடு இனி எப் பொழுதேனும் இந்தியாவில் தோன்றுதல் கூடுமோ? தோன்று மென்று வைத்துக் கொண்டாலும் அவ்வாறு ஒருவர் கையை ஒருவர் எதிர்பார்த்து வாழ்வது அடிமைத்தன மன்றோ? பிரபஞ்சத்தில் தோன்றிய ஒவ்வொருவனும் பூரண விகாசம்பெற்று சுதந்தரனாய் வாழவேண்டு மென்பதே தற்காலத்தவர் கொள்கை. வருணாசிரம தர்மம், எவ்வளவு மேன்மை யுடைய தாயினும், அத்தருமம் வகு த்தவர்களின் நோக்கத்துக்கு மாறான பலன்களை அது தற்காலம் அளித்து சமூக வாழ்வுக்கு இடையூறு செய்வதால், அதனை அடி யோடே களைய வேண்டுமென்பது அறிவாளிகளின் கருத்து,

பத்திராதிபர்.

ராவ் ஸாஹிப் பி. சம்மந்த முதலியார், பி. ஏ., பி. எல்.
ஸ்மாள் காஸ் கோர்ட்டு ஜட்ஜ்.

புரோபஸர் ஸி. வி. ரமணன், எப். ஆர். எஸ்.

தமிழர் இயக்கம்.

" தமிழ் நாடு "

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் உபந்நியாசக் குறிப்புகள்.

முத்தியால்பேட்டை உயர்தரப் பாடசாலைத் தமிழ் மாணவர் சங்கத்தின் ஆதரவில், சென்ற பெப்ருவரிமீ 27உ மாலை 5-மணிக்கு, ஒரு பெருங் கூட்டங் கூடிற்று. அவ்வமயம் சென்னை சட்டசபை அக்கிராசனர் ஸ்ரீமாந், எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை அக்கிராசனம் வகித்தார். "நவசக்தி" பத்திராதிபர் ஸ்ரீமாந் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் "தமிழ்நாடு" என்பதைப் பற்றி ஒரு சொற் பொழிவு நிகழ்த்தினர். ஸ்ரீமாந் முதலியாரின் உபந்நியாசத்தின் குறிப்புகள் சில வருமாறு :—

"தமிழ்நாடு" என்பது தமிழர்கள் வாசஞ் செய்யும் ஓர் எல்லைக்குட் பட்ட வெறுந்தரை யன்று. ஆங்கிலத்தில் நேஷன் என்ற வார்த்தைக்கு என்ன பொருளோ அதே பொருளை யான் "நாடு" என்பதற்குக் கொண்டுளேன்.

***

தமிழ் நாட்டின் எல்லையைப் பற்றி அநேக வாதங்களுள்ளன. அவைகளைப் பற்றி நான் பேசப் போவதில்லை. வடக்கே வேங்கடம்; தெற்கேகுமரி ; மற்றிரு பக்கமும் கடல். இந் நாற்பாங்கு எல்லைக்கு உட்பட்ட நிலப் பரப்பில் வாழ்ந்த மக்களின் வழக்க ஒழுக்கங்களும் பிறவுஞ் சேர்ந்த ஒன்றே தமிழ் நாடென்பது. நம் நூல்களில் காணும் நாட்டுப் படலங்கள் வெறும் நிலவெல்லை கூறுது மக்களின் வழக்க ஒழுக்கங்களையும் பிறவற்றையும் கூறி யிருத்தல் கவனிக்கத் தக்கது.

***

தமிழ் நாட்டை ஆராயுங்கால், அது பண்டைக்காலத் தமிழ் நாடென்றும், இடைக்காலத் தமிழ் நாடென்றும், தற்காலத் தமிழ் நாடென்றும் பிரியும். பண்டைக் காலத் தமிழ் நாட்டை ஆராய்வோம். பண்டைக்காலத் தமிழ் மக்கள் நாகரிகம் செறிந்தவர்களாகக் காணப்பட்டார்கள். இதற்குப் புறநானூறு முதலிய சங்க நூற்களே யாதாரம். அக்காலத்தில் தமிழ் மக்கள் வாழ்க்கை நலனைப் பெற்றிருந்தார்கள். அக்காலத்து மக்களிடத்தில் அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் ஒருங்கே அமைந்து காணப்பட்டன. இவ்விருவித வாழ்க்கை ஒருப்படின் குடும்பம் செவ்வனே நடைபெறத் தடை

யொன்று மிராது. (தமிழ்மக்கள் நால்வகை நிலங்களை 'வகுத்துக் கொண்டு வழக்க ஒழுக்கங்களால் தமிழ் நாட்டைக் கட்டிய முறைகள் விரிவாகப் பேசப்பட்டன.)

***

அக்காலத்தின் அரசாட்சி எவ்வாறிருந்தது? அக்காலத்து மன்னர்கள் குடிகளின் விருப்பப்படி செங்கோலோச்சி வந்தனர். அடக்கு முறைகள் கிடையா. சூரிய வெப்பமும் சமைப்பதினு லுண்டாகும் வெப்பமும் தவிர, ஏனைய வெம்மை மக்களறியார்; வானவில் தவிர, கொலை வில்லையறியார்; அக்காலத்து மக்களுக்கு வெகு நாட்கள் வரை நரை திரை வாராததற்குக் காரணம், மனைவியாலும், பிள்ளைகளாலும், அரசனாலும், ஊராராலுந் துன்பம் நேரிடாமையே யாகும்.

***

அக்கால மக்கள் இயற்கை நூலையே வாசித்து வந்தார்கள்; இயற்கையோடு சேர்ந்த அன்பையே தெய்வமாகக் கொண்டனர். தமிழுக்கும் இயற்கைக்கும் அதிக நெருக்கம் உண்டு. முருகு என்ற சொல்லின் பொருளை யுணர்ந்தால் இது செவ்வனே புலனுகும். இளமையும் அழகும் மணமும் அமையப்பெற்றது என்பது அதன்பொருள். முருகனைப்பற்றி ஒருகட்டுரை 'குமரனில்' எழுதியிருக்கிறேன். ஆநந்தம் ததும்பி, மனவெழுச்சியினல் உண்டான பாக்களையே பாடல்களாகக் கொண்டிருந்தார் தமிழர். இயற்கைப்பாவின் இன்பத்தை நுகர்ந்தனர்; கடல் காடு, மலை, ஆறு முதலிய விடங்களே பாக்களுக் குறை விடங்கள்.

***

அக்காலத்து வியாபார முறைகளும் தொழில் முறைகளுஞ் செவ்வையாக நடைபெற்றன. [இங்கே தொழிற் கல்வியைப் பற்றி ஸ்ரீமாந் முதலியார் சிறிது விரிவாகப் பேசினர்.] இத்தகைய செழுமைக்குக் காரணம் என்னை? ஒற்றுமையே யாகும். தமிழர் என்ற ஒரே எண்ணம். அக்காலத்து மக்கள் சாதியிலும், மதத்திலும் கவலை செலுத்தவில்லை. சிற்சில பிளவுகள் காணப்படினும், தாங்கள் எல்லோரும் தமிழர்கள் என்று உணர்ந்தார்கள். ஒரே மொழி பேசி வந்தார்கள். வழக்க ஒழுக்கங்களும் ஒரு விதமே.

இடைக்காலத்தில் அடியோடு தமிழ்நாடு மாருவிடினும், சிறிது மாறுபாடிருந்தது. எனவே இதைச் சிதைவு காலம் என்னலாம். ஆரியர், மகம்மதியர், கிற்ஸ்தவர் முதலியோர் வந்த காலம் இதுவே. தமிழர்கள் ஆரியர் களாகவும், மகம்மதியர் களாகவும் மாறியிருக்கலாம். ஆனல் தமிழ் அடியோடு ஒழியவில்லை. அதனல் பெரிதும் ஒற்றுமை குலையவில்லை.

தமிழர் இயக்கம்

முன்னே பலஜாதியார் வந்தனர். ஆனால் தமிழர் என்ற எண்ணம் மாறவே யில்லை. இடையில் மடங்கள் தோன்றின; வந்தது மோசம். சமயச் சண்டைகள் உதித்தன. (சமயத்தார் கொடுமைகள் விரிவாகப் பேசப்பட்டன.) தமிழர் என்ற எண்ணம் பறந்தோடிற்று.

***

தற்போழ்து, தமிழ்த் தரைமட்டு முள்ளது. தமிழ் மக்களிருக்கின்றனர். ஆனால் தமிழ் நாடு இல்லை. எங்கே? உயிர்போகும் நிலையி லிருக்கிறது. காரணம் யாது? தாய்ப் பாஷையிடம் பற்று இல்லாமையே. பிராமணர் பிராமண ரல்லாதார் தங்களைத் தமிழர் என்று கருதுகின்று ரில்லை. மகம்மதியரும், கிறிஸ்தவரும் அவ்வாறே. எங்கே நுழைந்தாலும் சாதிச்சண்டை, சமயச்சண்டை காணலாம். தாய்ப் பாஷையிடம் பற்றுள்ளவனே தேசாபிமானி. வங்காளத்தில் இவ்வளவு மோசமில்லை. சகோதரர்களே! தாகூரைக் கவனியுங்கள். "கீதாஞ்சலியை" முதல் வங்காளத்தி லியற்றி யன்றோ அவர் ஆங்கிலத்தில் அதை மொழிபெயர்த்தார். லோகமான்ய திலகர் கீதா ரகசியத்தை எம்மொழியில் எழுதினர்? இதனால் நான் ஆங்கிலம் பயில வேண்டாமென்று சொல்கின்றே னில்லை. அறிவு வளர்க்க ஆங்கிலம் பயின்று லென்ன? பிரெஞ்சு பயின்று லென்ன? ஜெர்மன் பயின்று லென்ன? தாய்ப் பாஷையை மறக்கலாமா? தெலுங்கர் தெலுங்கை விருத்தி செய்கின்றனர். ஆனால் தமிழரோ? ஆங்கிலங் கற்ற தமிழன், தன் குமாரனுக்கு ஆங்கிலத்தில் நிருபம் வரையக் காண்கிறோம்.

***

சண்டைகளை யொழிக்க வேண்டும். மேனாட்டி லிருப்பது போல அரசியலில் கட்சிபேத மிருக்கலாம். பிறப்பால் பேதம் சட்டசபை முதலிய விடங்களில் பாராட்ட லாகாது. இப்பொழுது பாராட்டப்படுகிறது. காரணம் தங்களைத் தமிழர்களென்று சகோதரர்கள் கருதாம லிருப்பதே. செய்ய வேண்டுவது யாது?

***

பன்மையை ஒருமைப் படுத்தல் வேண்டும். சமயத்தால் ஒருமை யெய்த முடியுமா? சாதியினால் முடியுமா? முடியாது. தமிழ் நாடு ஒருப்படும் விதம் தமிழ் மொழியினால் மட்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழர் இயக்கம் என்று ஓர் இயக்கம் வரல்வேண்டும். அது அனைவருக்கும் உரியது. எல்லாரும் இந்த இயக்கத்தில் சேரலாம். பாஷை இதற்கு அடிப்படை.

***

தமிழை வளர்த்தல் வேண்டும். தனிப் பாஷையாகத் தீண்டப்படாத பாஷையாகத் தமிழை வளர்த்தல் கூடாது. தமிழ்த் தாய்க்குச் சிலப்பதிகாரம் மணிமேகலை மட்டுமன்றி ஏனைய அணிகலன்கள் தேவை. அந்நிய பாஷையி லிருக்கும் அருமை விஷயங்

கள் தமிழில் மொழி பெயர்த்திடல் அவசியம். ஆங்கிலேயர் திருக்குறள், திருவாசகம் முதலியவற்றை ஏன் மொழி பெயர்க்கின்றனர்? அவர்கள் பாஷை உலக முழுதும் பரவுவதற்குக் காரணம் இதுவே. தமிழும் உலகறியும் பாஷையாதல் வேண்டும். அப்போது சட்ட சபைகளில் தமிழ்த் தாய்த் தாண்டவம் புரிவாள்.

***

இவ்வேலை எவரால் செய்யப்படல் வேண்டும்? பண்டிதர்களால் முடியுமா என்றால் முடியாது. அவர்கள் வறுமை, பொறாமை, செருக்கு என்ற மூவகைப் பேயினால் கட்டுண்டு கிடக்கிறார்கள். ஆங்கிலம் பயின்ற தமிழர் என் செய்கின்றனர்? தங்கள் ஓய்வு காலங்களைத் தமிழ் மொழி வளர்க்க ஏன் செலவிடல் கூடாது? வயது சென்ற முதிர்ந்தவர்களையும் விடுவோம். மாணாக்கர்கள் மனதில் இந்த இயக்கம் தோன்றல் வேண்டும. இத்தாலியா தேசத்து மாசினி இளைஞர்களையே பிடித்தார். தமிழ் எல்லா பாஷைகளுக்கு முற்பட்ட பாஷை. அயர்லாந்து பெருமை பெற அடிப்படையாக விருந்தது பாஷாபி விருத்தியன்றோ? தமிழர் இயக்கத்தில் சேருங்கள், மரியாதை பெறுவீர்கள். நீங்கள் போற்றப்பட வேண்டுமானால் பிறப்புரிமை பெறவேண்டுமானால் தமிழ் நாட்டைப் போற்றுவீர்களாக. தமிழர்கள் என்ற உணர்வு கொண்டு பல வேற்றுமைகளைக் களைவீர்களாக. தமிழ் மொழியை வளர்ப்பீர்களாக. தமிழ்நாடு பரிணமிக்கும்.

நவசக்தி.

ஓகோ! நாங்கூழ்ப்புழுவே! உன்பாடு
ஓவாப்பாடே. உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ!
எம்மண்ணாயினும் நல் மண்ணாக்குவை
விடுத்தனை இதற்கா எடுத்த உன் யாக்கை
உழு துழு துண்டு மண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந்தும் புகழ் வேண்டார் போல
ஒளிக்குவை உன் குழிவாயும் ஓர் உருண்டையால்!

(மனோன்மணீயம்)

தேசபக்தி

ஸ்ரீமாந் தி. ரா. ஸ்ரீநிவாஸன் எழுதியது.

எய்தற்கரிய மானிடப் பிறவியை யடைந்த நாம் யாவரும் அனைவரிடத்தும் அன்பு பூண்டொழுகல் வேண்டும். அதுவே நாம் பிறப் பெய்தியதன் பெரும் பயன்.

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்பு தோல் போர்த்த வுடம்பு"

எனப் பொய்யில் புலவர் கூறியதுங் காண்க. அன்பிலார் தம் உயிர் வாழ்க்கையை வன்னிலத்திற் பட்ட மரந் தளிர்த்தற்கு உவமை கூறினர் பெரு நாவலர். அகத்திலே அன்பிலார்க்குப் பிற புற வுறுப்புக் களிருப்பினும் என்? அன்னோர் பின்னர் அந்தகன் முனிவிற்குத் தப்புந் தகைமை யாளரோ? என்பிலாப் புழுக்களைப் பகலவன் தனது வெப்பம் பொருந்திய கிரணங்களால் பொசுக்குவது போல வன்றோ அறக்கடவுள் இவ் வன்கணாளரைச் சுடும். ஆகவே அனைவரும் அன்பு பூண்ட மேனியராய் இலங்க வேண்டும் என்பது அங்கை நெல்லிக்கனி. இனி, "அன்பு" இடவேறுபாடு நோக்கி வெவ் வேறு வகைப் பெயரா னமையும்.—ஐங்குரவர் தம் மாட்டு வைக்கும் அன்பு "பக்தி" என்ற சிறந்த பெயரானும், இல்லா ளிடங்காட்டும் அன்பு "காதல்" எனவும், மக்களிடங்காட்டும் அன்பு "வாஞ்சை" என்றும், வாயில்லா ஜீவப்பிராணிகள் பால் கொள்ளும் அன்பு "ஜீவகாருண்யம்" என்றும், இவ்வாறு மற்றும் பலவாறாகவும் தனிப் பெயரால் அழைக்கப்படா நின்றது. எல்லா வற்றிற்கும் அடிப்படை "அன்பே" யாகும். முற் கூறிய விதம் ஐமுது குரவர் பால் காட்டும் அன்பு "பக்தி" என்ற சிறப்புப் பெயர் பூண்டது. தந்தை, தாய், ஆசான், அரயன், தம்முன், இன்னார் மாட்டு அன்பு முறையே "பிதுர் பக்தி," "மாதுர் பக்தி," "குரு பக்தி" "ராஜ பக்தி," "ப்ராதுர் பக்தி" என வழங்கா நின்றன. இனி, எப்பொருட்கு மிறைவனும், அன்பே உருவானவனு மான நின்மலன் கண் வைக்கும் அன்பும் இச்சிறப்புப் பெயரே கொண்டது. நம்மை ஈன்று வளர்த்த தாய் நாட்டின் வாய்க் காட்டும் அன்பும் "பக்தி" என்ற சீரிய பதமாகவே கருதப்பட்டது. ஆகவே, நாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டின் பேரில் நம்மால் வைக்கப்படும் அன்பே "தேச பக்தி" எனப் பெயருற்றது என்பது வெளிப்படை. இனி, "பக்தி" என்ற தூய சொல் "அன்பு" என்ற மொழியின் உயரிய பான்மை என்பது விளங்கும். "பக்தி," "வணக்கம்" என்பதை உள்ளிருத்திக் கொண்டுள்ளது. ஆதலின், வணக்கத்தோடு கூடிய அன்பே

"பக்தி" எனப் பட்டது. இன்னும், "பக்தி" பயம் அறியாதது. உண்மையைக் கடைப் பிடிப்பது. நாடிய தேட்டத்தை விட்டுக் கணப் பொழுதும் அகலா திருப்பது. என்றும் அழியாது, புனிதமாக்கிப் பயனூட்டுவது. அளவிலாதது. இவைகளே "பக்தி"யின் இலக்கணம். சுய நலம் ஏதுங் கோராது வைக்கும் பக்தியே உத்தம பக்தியாயினும், இத்தகைய பக்தியைத் தம் மாட்டு உடையோரைக் காண்டல் மிக்க அருமை. தற்காலம் பயன் கருதியே பக்தி வெளி வேடத்திற்கேனும் மேற் கொள்ளப் படா நின்றது. இதனை இம்மட்டோடு நிறுத்திக் கருதியது கழறப் புகுவாம்.

சீராட்டித் தாலாட்டிப் பாலூட்டிப் பரிவுடன் பாது காத்து வளர்க்கும் அன்னையிடம் நமக்கு இயற்கையாகவே அன்பு தோன்று தல் போலவே, நாம் பிறந்து வளர்ந்த இடத்தின் பாலும் நமக்குப் புனிதமான அன்பு உணர்ச்சி இளமையி லேயே அமைகின்றது அனுபவம். நாம் வளர்வதற்கு அனுகூலமான உணவுப் பொருள்களை ஈன்றது எது? வதிதற்கு இடம் வழங்கியது யாது? கண்ணுக்கினிய காட்சியும், மற்றும் பல இந்திரியங்களுக்கு மகிழ்ச்சியும் பயந்தது எது? நம் தாய் நாடேயன்றோ. இவ்வாறு நமக்கு ஆவன வெல்லாம் களிக்கக் கொடுத்த நம் தேயம் நம்மிடை எதை எதிர் பார்க்கின்றது? காசா? அன்றிப் பொன்னா? இல்லை! இல்லை! பின்னர் அப் பொருள் தான் யாது? ஆடகங் கொழிக்கும் இயல் வாய் நம் பதி நம்மிடம் "அன்பு" எனப்படும் அபிமானத்தையே பெற விழைகின்றது. நாம் நன்றி கொன்றோ ராக லாமா? "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டு." ஆனால் செய்ந் நன்றி கொன்ற மகற்கு எங்கேனும் ஈடேற வழியுளதோ? தினையளவு அன்பையும் பனையள வாகக் கொள்ளும் மாண்பினை யுடைய நம் தாய் நாட்டின் கண் நாம் அன்பும் வணக்கமுங் கூடிய "பக்தி" வைத்து நம் நன்றியறிதலை வெளியிடாதிருப்பது அழகாமோ? நம் கடமையாகிய அதை இன்றே பூண்டு நாம் ஒவ்வொருவரும் நம்மா லியன்ற அளவு நம் நாடு செல்வம், புகழ் ஆகிய இவற்றில் முன்னேற்ற மெய்தி க்ஷேமமாய் வாழுமாறு செய்ய முற்பட வேண்டாமா? அதற்கான பணி செய்யவும் முன்னணியில் நிற்க வேண்டாமா? இதுவே கற்றறி மேலோர் செய்கையும், உத்தம தேச பக்தியு மாமன்றோ?

முன்னரே கழறியவாறு, நாம் பிறக்குங் காலையிலேயே நம் ஒவ்வொரு வருக்கும் "தேசாபிமானம்" என்னும் பெரு நிதி சச்சிதானந்தப் பரம்பொரு டன்னால் அளிக்கப் படுகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பிறப்புப் பதியின்கண் பேரவா உடையவரா யிருத்தல் வேண்டு மென்றதுவே இயற்கையின் செவ்விய திட்டமும். எவ்வயின் இருப்பினும், எக்காலத்தும் 'நாம் நமது ஜனன பூமியின் யோக க்ஷேமத்திலேயே கருத்தைச் செலுத்தி அதைக் குறித்துப் போவோர் வருவோரை வினவி யிருப்பது சகஜம்.

அன்றியும் சிறிது நாட்களேனும் அங்குச் சென்று நம் உற்றார், உறவினர் முதலாயின ரோடு கலந்து காலங் கழித்துத் திரும்ப வேண்டும் என்னும் பேரவாவும் நம்மிடையே மிக்கிருப்பது மறுக் கொணு விஷயம். தங்கள் சொந்த ஊரை அறவே நினையாதோர் இல்லா தொழிகின்றனர் எனத் திட்டமாய்க் கூறலாம். அப்படி இருக்க நேரும் அன்னோர் படைப்பின் நவீனச் சின்னங்களே. ஆதலின் இயற்கைக்கு மாறுனவர். ஆகவே மாந்தரியல்பு அவரிடை இலங்கா. அன்னோர் எத்தகைய செல்வ வந்த ராயினும், அதிகாரம் மிக்கோ ராஞலும் சுய நலமே கருதிய அகத்தின ராதலின், யாவரா ஞம் இகழப்பட்டு, இறந்ததும் மறக்கப் படுவர். அன்னோர் அரிதினும் அரிதான மானிடப் பெரும் பிறவி யுற்றும் அதஞ லெய்தக் கூடிய சிறந்த பயனை நுகராது மறைந் தொழிகின்றனர்.

இனி, பிறந்த இடம் குக்கிராமமே யெனினும் அதுவே தேசாபி மானம் பெரிதுள்ளோருக்குப் புருகூதன் பதி. அவண் உள்ள இன்பமே இந்திர போகம். அங்குள்ள மாமடர் பொழிலும், பச்சைப் பசேரெனப் பரந்த புலங்களுமே அவர்தம் விழை பொருள். சிற்ருறுகளும், குளங்களும், கூபங்களுமே அவர்களுக்குப் பெரிதும் இன்பம் விளைப்பன. அவ்வயின் உள்ள நீல நிறப் பொற்புறு ஆகாயமே, பொன் போன் ருெளிரும் சூரிய கிரணங்களே, தண்மதி தன் வெள்ளிக் கம்பியன்ன வெளிச்சக் கற்றைகளே அவர்களுக்குப் பெரும் ஆறுதலையும், மனவெழுச்சி, ஊக்கம் முதலிய வற்றையும் அளிக்க வல்லன. அங்கு வீசும் காற்றே அவர்கள் இளைப்பைப் போக்கிப் பலமுதவும் சஞ்சீவி. அஃதே அவர்கள் திளைக்கும் கந்தம் பொதி மந்த மாருதம். அவண் கூடிக்குலவிக் களித்துத் திரியும் புள் ஜாலங்களே அவர்தம் இணைபிரியா இயற்கை நண்பர்கள். அவற்றின் தீங்குரலே அவர்தம் செவிக்கின் பூட்டும் குழலமுதம். மற்றும், பிறர் விரும்பா தொழியும் அங்குள்ள பிற விஷயங்கள் பலவும் அவர் களுக்கு ஆர்வத்தையே பயப்பன. செவ்வி சிறிது மில்லாத பொருள் கள் யாவும் அவ்வூரிற் பிறந்து வளர்ந்த காரண மொன்று கருதியே அவர்களுக்குக் கவின் பெற்றவையாய் விளங்கா நிற்கின்றன. கவலை யற்ற பால பருவத்தைக் கழித்த தலத்தைக் காணுந்தோறும் பொங் கிப் பூரித்தெழும் மனமகிழ்ச்சியே அவ்விடத்திற்குப் பெரும் வனப் பூட்டுங் கருவியாய் இலங்கு கின்றது. தமது பாலப் பருவ நேசர் வசிக்கும் காரணத்தாலும் அவ்வூர் அவர்களுக்குப் பெரும் களிப்பை யூட்டு வதாய் மிளிர் கின்றது. ஆகவே, தான் பிறந்து வளர்ந்த இடத்தை அன்புடனும், அகமகிழ்வுடனும் நாடாதவன் எவனுமிலன் என்றே பகரலாம். அவ்வாறு இருக்க நேரிடு மெவனும் முற்கூறிய விதம் மக்கள் யாக்கைக்குப் புறம்பானவன். அவனைப் பற்றி நாம் சிந்தித்தலும் தகாது.

உலகத்துள்ள ஒவ்வொரு தேயத் தாரும், தம் தேயம் எவ்வளவு இழிவான தாயினும் அதனைப் பரிவுடன் நேசிப்பர். அதன் முன்

னேற்றத்திற் காவன புரிய முன் வந்து ஊக்கத்தோடும் முயல்வர். தங்களுக் குள்ளே எவ்வளவு ஜாதி, மதம் இவற்றின்பாற் பட்ட சண்டைக ளிருப்பினும், தம் நாட்டிற்கு யாதா மொரு கேடு சூழ்ந்த போது, யாவரும் ஒன்று பட்டு அதனைப் போக்க ஒருமிக்கப் பாடுபடு வர். அதன் பொருட்டு மேலான தம் ஆவியையும் இழக்கத் துணிவார். இதுவே தேசாபிமான முன்னோரின் கருதாச் செய்கை. ஆனால், நம் மிந்தியா விலோ? சொல்ல வாயெழ வில்லை! இன்னும் பெரும் பான்மை யோர் சுய நலப் புலிகளாக இருக்கின்றனரே யன்றி, பாரத நன்னாட்டின் முன்னேற்றத்திற் காவன செய்ய முன்வரா திருக்கின்ற னர். நம் "இந்தியா" எப்பேர்ப் பட்டது? பரந்த பூமியின் கண் ணுள்ள எல்லாத் தேயங்களையும் விட நம் புண்ணிய பூமி யன்றோ? நீர்வளம், நிலவளம், வேளாண்மை, கைத் தொழில், வாணிகம், கல்வி, செல்வம், சங்கீதம், சிற்பம், வாகடம், ஆன்மார்த்த சாஸ்திரம், ஜடசாஸ்திரம், பீஜகணித சாஸ்திரம், கோள சாஸ்திரம், வான சாஸ்திரம், தத்வ சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம் எனப்படும் அநேக பூர்வீக சாஸ்திரங்களும், தானம், தருமம், பரோபகாரம், ஜீவகாருண் யம், தேச பக்தி, தெய்வ பக்தி, மத பக்தி, ஒற்றுமை ஆகிய இவை யாவற்றினும் சிறந்தோங்கி மிளிர்ந்தது? கண்ணுதற் கடவுளும், ஆழியங்கையனும் அவதரித்துத் திருவிளையாடல் நிகழ்த்திய பதி நம் நாடேயல்லவோ? எண்ணில் பல யோகிகளும் அருந்தவ முனிவர் களும் சீருறப் பொருந்தி முக்தி யடைந்த இடம் நம் நாடே யன்றோ? சமயாசாரியரும், ஆழ்வாராதிகளும் ஆவிர்ப்பவித்து புகழுறப் பாடிய நன்னாடு எது? மற்றும், பல ஜீவ நதிகளையும், புண்ணிய க்ஷேத்திரங் களையும் தன்னுள்ளே கொண்டது யாது? கற்பிற் சிறந்த காரிகையரை யும்; தெய்வப் புலமைக் கவிஞர் பலரையும் பெற்றெடுத்தது எது? நம் பாரத புண்ணிய பூமியே யன்றோ! தற்காலம் மிகுந்த ஈன ஸ்திதியி லிருக்கும் நம் தேயத்தை முன்னிருந்த நிலைமைக்கு உயர்த்த வேண்டியது நம் கடமையே யல்லவா? இனி யேனும் நாம் வாளா விராது நம்மா லியன்ற வழிகளில் தாய் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதிப் பாடு படுவோம். உலக சிரேஷ்டனும், உத்தம தேச பக்தனு மான "காந்தி" முனிவன் சொற்படி நடப்போம். கத்தருடுத்து இந்தியாவின் செல்வ நிலையை உயர்த்தி, வறுமைப் பிணியை ஒழிப் போம். எல்லாம் வல்ல பரமன் நமக்கு அவசியம் தண்ணருள் பொழிவான். குற்றங்களைந்து குணங் கைக்கொள்ளல் கற்றறிந் தடங்கியோர் கடன்.

கேய்க்வார் மஹாராஜா.

இந்திய மன்னர் வான மண்டலத்திலே தற்காலத்து, மிக்க ஜோதியுடைய விண்மீனுய் விளங்குவது மாட்சிமை தங்கிய சயாஜி ராவ் கேய்க்வார் அவர்களே.

பரோடாவிலே ராஜாவா யிருந்த மல்ஹாரி ராவ் ஹோல்கார் மீது ஆரோபணம் செய்யப் பட்டிருந்த குற்றத்திற்காக,பிரிட்டிஷ் துரைத் தனத்தார் அவரை அரியாசனத்திலிருந்து நீக்கி உத்தகமண்டலத்தில் கொண்டு வந்து சிறை செய்து வைத்தனர். ஆகவே பரோடாவை ஆள அரசனில்லா தாயிற்று. ஒரு ராஜகுமாரனை தத்தெடுக்கும்படி பிரிட்டிஷ் துரைத்தனத்தார் மஹாராணிக்கு அனுமதி கொடுத்தனர். மஹாராணியின் ஒரு அகன்ற பந்து குடும்பத்தில் பிறந்த நமது சயாஜிராயரும் வேறிரண்டு சிறுவர்களும் 1875-ம்௵ மேமாதம் பரோடாவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

நமது சயாஜிராயர் ராஜ குடும்பத்தோடு பந்துத்வ முடையவ ராயினும் பெரிய செல்வப் பெருக்குடையவ ரல்லர். நாசிக் பட்டணத்

தின் அருகாண்மையில் கவல்ஞ என்னும் குக்கிராமத்தில் சயாஜிராயர் குடும்பத்தார் வாழ்ந்து வந்தனர். சயாஜிராயரும் அவர் பெற்றோரும் உழவுத் தொழில் புரிந்து ஜீவியம் நடத்தி வந்தனர். பரோடாவுக்குக் கொண்டு வரப்பட்ட காலத்தில் சயாஜிராயருக்குத் தன் தாய்பாஷையான மருத்தியில் கூட நல்ல பயிற்சி யில்லை.

சிறுவர்களின் தீட்சண்ய புத்தியைப் பரிசோதனை செய்தறிந்து ஒருவனை ராஜ குமாரனுகத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்தோடு அப்பொழுது 'ரெஸிடன்ருக' இருந்தவர், அவர்கள் ஒவ்வொருவரிடத்தும் 'நீங்கள் ஏன் வந்தீர்கள்' எனக் கேட்டனராம்.

'மஹாராணி வரும்படி விரும்பியதனுல் வந்தேன் !' என்ருராம் ஒருவர்.

'பரோடாவைப் பார்க்க வந்தேன்' என்ருராம் இன்னெருவர்.

'பரோடா தேசத்தை ஆள வந்தேன்' என்ருராம் நமது சயாஜிராயர்.

ஆகவே சயாஜி ராயரே ராஜ குமாரனுகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அவர் அப்பொழுது மைனரா யிருந்தபடியால் அரசாட்சி நடத்துவதற்கு பெயர் பெற்ற ராஜ்ய தந்திரியான ராஜா ஸர் டி. மாதவராயர் 'ரீஜன்ருக' நியமனம் பெற்ருர்.

இந்த மாதவராயர் திருவிதாங்கூர் திவான்ஜி யாகவிருந்து பழக்கம் பெற்றவர். கஜானுவில் பணமில்லாமலும் ஒழுங்கான அரசியல் முறை யில்லாமலும் ஹீன ஸ்திதியி லிருந்த ஸமஸ்தானத்தை மாத்ருகா ராஜ்யம் (Model State) என்னும் புனைபெயர் பெறுமாறு திருத்த முற உருப் படுத்தியவர். ஆகவே உருக் குலைந்திருந்த பரோடாவைச் சீர்திருத்த அவரே தகுதியுடையவ ரெனக் கண்டு பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அவரை 'ரீஜன்' ருக்கினர்.

நமது சயாஜிராயர் ஷை மாதவராயரின் மேற் பார்வையிலேயே வளர்ந்து வந்தார். சயாஜிராயரின் அரசியற் குரு மாதவராயர் என்றே சொல்ல வேண்டும். 'பிதுர் சதகுணம் புத்ரஃ' என்ற முதுமொழிக் கிணங்க, சயாஜி ராயர் குருவை விட நூறு பங்கு பேரும் புகழும் பெற்று விளங்குவது தகுதியுடைய தன்ருே.

எவ் வழி நோக்கினும் ஏனைய சுதேச ராஜ்யங்களை விட, பரோடாவே மிகச் சிறந்து நிற்கின்றது. காரணம் கேய்க்வாரின் நுட்பமான மேற் பார்வையில் அரசியல் நடை பெறுவதேயாம். அவருடைய அறிவின்றி பரோடா ராஜ்யத்தில் எத்தகைய சிறு காரியமும் நடைபெருது. ஒரு கீழ்த்தர உத்தியோகஸ்தனுக்கு ஒரு ரூபா அபராதம் போட வேண்டுமானுலும் கேய்க்வாரின் அனுமதி அவசியம்.

கேய்க்வார் மஹாராஜா

ஐரோப்பா, கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் முதலிய வெளி நாடுகளுக்குப் பல முறை சென்று அந்தந்த நாடுகளின் அரசியல் முறைகளையும் சமுதாய ஒழுங்குகளையும் ஆசாரங்களையும் கைத்தொழில் வர்த்தகப் போக்குகளையும் நேர்முகமாசப் பார்த்து அவற்றுள் நன்மையானவைகளைத் தமது நாட்டில் நடப்பாக்குவதற்கு கேய்க்வார் ஸதா கண்ணும் கருத்துமாயிருந்து உழைக்கின்றனர். தம் குடிகளோடு ஊடாடிப் பழகி அவர்களுடைய குறை பாடுகளை நேர்முகமாகக் கண்டறிவதில் அவருக்கு மிக்க பிரியம். கச்சேரிகள், பள்ளிக்கூடங்கள், சந்தை ஸ்தலங்கள் முதலியவைகளுக்கு அவர் தாராளமாய்ச் செல்வார். பொதுக் கூட்டங்களில் தாராளமாய்த் தலைமை வகிப்பர். மன்னராய் இருப்பவர்கள் மற்றவர்களோடு கலவாது எப்பொழுதும் ஒதுங்கியே நிற்க வேண்டு மென்னும் குருட்டாசாரம் அவரிடம் இல்லவே இல்லை. சாமானிய ஜனங்களுக்கும் அவர் கைலாகு கொடுத்து சம்பாஷணை செய்வது வழக்கம்.

கேய்க்வார் மஹாராஜா அவர்களை டெல்ஹி தர்பார் காலத்தில் இந்தியப் பிரதிநிதிகளின் கூடாரத்தில் முதன் முதல் நான் சந்தித்தேன். தர்பார் விசேஷங்களைப் பற்றி 'ரிப்போர்ட்டு' செய்வதற்கு இந்தியாவின் நாலு பாகங்களிலிருந்தும் கணக்கற்ற பத்திரிகைப் பிரதிநிதிகள் டெல்ஹிக்குச் சென்றிருந்தனர். அவர்களுக்கெல்லாம் தர்பார் ரெங்கத்தில் தானே பிரத்தியேகம் கூடாரம் தயார் செய்யப்பட்டிருந்தது. ஒரு நாளிரவு ஒரு பிரதி நிதியை ஒரு காரியார்த்தமாக நான் காணச் சென்றிருந்த பொழுது கேய்க்வார் மஹாராஜா அவ்விடம் வந்து பிரதிநிதிகளோடு உள்ளறையில் விருந்துண்பதாகக் கேள்விப் பட்டேன். உடனே எனக்குண்டான மகிழ்ச்சி அற்பமல்ல உலகெங்கும் பெயர்பெற்ற பரோடா மஹாராஜாவைத் தரிசனம் செய்ய நேர்ந்தால் யாருக்குத்தான் சந்தோஷ முண்டாகாது.

பத்திரிகைப் பிரதிநிதிகளுடன் பழகிப் பல விஷயங்களை அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் கேய்க்வார் அவர்கள் கூடாரத்துக்குச் சென்றனர். அவர் சென்ற பொழுது இராப்போஜன காலமாயிருந்ததனால் பிரதி நிதிகளில் சிலர் அவரை விருந்துக் கழைத்தனர்.

பத்திரிகைப் பிரதிநிதிகள் தானே என அலட்சியம் செய்யாமல் மகுட மன்னரான சயாஜி ராயர் அவர்களது உபசரணையை ஒப்புக்கொண்டு அவர்களுடன் ஸமமாக அமர்ந்து போஜனமும் செய்தனர். இதுவன்றோ பெருந்தன்மை !

விருந்து முடிந்து வெளியறையில் வந்த பிறகே நான் கேய்க்வார் அவர்களைச் சந்தித்தேன். அக் காட்சி இன்னும் என்னுள்ளத்தில் தோன்றி மகிழ்ச்சி அளிக்கின்றது. யாவரும் உட்கார்ந்த பிறகு சம்பாஷணை தொடங்கிற்று. அங்கே பல பாஷையினரும் பல நாட்டினருமான அநேகர் வந்திருந்தனர். மகாராஜா அவர்கள் அவர்களில்

சுமார் 10 பேர்களிடத்தில் அவர்களுடைய சொந்த பாஷையிலேயே பேசினார். சமயத்துக்கேற்றபடி சாதுரியமாய்ப் பேசும் திறமை கேய்க்வாரிடத்து அபரிமிதமாக உண்டு. சம்பாஷணை மத்தியிலே கேய்க்வா ரவர்களின் பரந்த ஞானத்தை நான் நன்குணர்ந்து கொண்டேன்.

அங்கிருந்தவர்களில் மிகுதிப்பேரும் சுருட்டுப் புகைக்கும் வழக்க முடையவர்கள். தேசமன்னர் முன்னிலையில் எப்படிச் சுருட்டுப் புகைப்பது என அஞ்சி அவர்களிற் சிலர் உறக்கச் சடைவினால் கொட்டாவி விடத் தொடங்கினர். இதை ஊகித்துணர்ந்த கேய்க் வார் "சிநேகிதர்களே! நான் சுருட்டுப் புகைப்பதில்லை யானாலும் நீங்கள் சுருட்டுப் புகைத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை யில்லை. என் பொருட்டு நீங்கள் உங்கள் மகிழ்ச்சியை இழக்க வேண் டாம்" என்று புன்முறுவலுடன் கூறினர்.

கடைசியாக சம்பாஷணை முடிந்தது. "நண்பர்களே! தர்பார் முடிந்த பிறகு நீங்கள் ஒவ்வொருவரும் பரோடாவுக்கு வந்து போக வேண்டும். எனக்கு உங்களை வர வேற்கும் மகிழ்ச்சியைத் தடை யின்றி அளிப்பீர்கள் என்றும் நம்புகிறேன்" என்று முக மலர்ச்சி யுடன் அழைத்துச் சென்றார்.

தர்பார் விஷயமாக கேய்க்வாரைப் பற்றி ஒரு அபவாதப்பேச்சு உலகம் முழுவதும் பரவியது வாசகர்களுக்கு ஞாபக மிருக்கலாம்.

நான் எல்லா விஷயங்களையும் நேரிற் பார்த்தறிந்தவ னாகையால் அந்த சம்பவத்தின் காரணத்தை விளக்கி அக்கண்ணிய புருஷரின் குற்றமற்ற தன்மையை உலகத்தவருக்கு அறிவுறுத்த வேண்டியது என் கடமையென்று எண்ணுகிறேன்.

தர்பார் விஷயமாக வுள்ள ஏற்பாடுகள் ஒரு வருஷத்துக்கு முன்னமேயே செய்யப் பட்டன. தர்பாருக்காக தயார் செய்யப்பட் டிருந்த இடத்தின் அளவு 20 சதுர மைல். அந்த இடத்தைச் சுற்றி ஒரு சிறு இருப்புப்பாதையும் (Light Railway) போடப்பட் டிருந் தது. அந்த தர்பார் ரெங்கத்தின் மத்தியில் சக்ரவர்த்தியின் தர்பார் மண்டபமும் அதைச் சுற்றிப் பல இடங்களில் தனித் தனியாய்ப் பல கூடாரங்களும் எழுப்பப் பெற்றிருந்தன. தர்பார் மண்டபத் தின் மத்தியில், தரை மட்டத்தி லிருந்து சிறிது உயரமான ஒரு மேடையில் சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தினிக்கும் ஆசனங்களும் அதற்கு எதிராக குதிரை லாட வடிவில் சுதேச மன்னர்களுக்கு ஆச னங்களும் அமைக்கப் பட்டிருந்தன. சக்கரவர்த்தி தம்பதிகளுக்கு ஆசனமிட்டிருந்த மேடைக்கு ஏறிச் செல்லுவதற்கு, சில படிகளும் கட்டப் பட்டிருந்தன.

தர்பார் சமயத்தில் சுதேச மன்னர்கள் முதலில் சக்கரவர்த்திக் கும் இரண்டாவது சக்கரவர்த்தினிக்கும், தமது ராஜ பக்தியின் அறி

குறியாகத் தலைவணங்கி, பின் மாறுது சக்கரவர்த்தி தம்பதிகளை நோக்கிக்கொண்டே இரண்டு படி இறங்கி பிறகு திரும்பி தத்தம் ஆசனங்களுக்குச் செல்ல வேண்டுமென்பது ஏற்பாடு.

ஆசன மிட்டிருந்த மேடைக்கு ஏறிச் செல்லுவதற்கு சில படிகளும் கட்டப் பட்டிருந்தன.

தர்பார் சமயத்தில் சுதேச மன்னர்கள் முதலில் சக்கரவர்த்திக்கும் இரண்டாவது சக்கரவர்த்தினிக்கும் தமது ராஜபக்தியின் அறிகுறியாகத் தலைவணங்கி, பின்மாறுது சக்கரவர்த்தி தம்பதிகளை நோக்கிக் கொண்டே இரண்டு படி இறங்கி, பிறகு திரும்பி தத்தம் ஆசனங்களுக்குச் செல்லவேண்டுமென்பது ஏற்பாடு.

முதலில் ஹைதரபாத் நைசாம் மகாராஜா எழுந்து சென்று முறைப் படி வணங்கி வந்து ஆசனத்தில் அமர்ந்தார். இரண்டாவது கேய்க்வாரின் முறை வந்தது. அவரும் முறைப் படி சென்று வணங்கித் திரும்பும் போது ஒவ்வொரு படியாய் இறங்குவதற்குப் பதிலாகத் தவறுதலாய் இரண்டாவது படியில் கால் வைத்து விட்டார். ஆகவே கேய்க்வார் மறிந்து விழவேண்டிய நிலைமையிலானார். ஆயினும் தன் கையிலிருந்த கோலின் உதவியால் விழாமல் நின்று தரை நிரப்பில் வந்து தன் ஆசனத்துக்குச் சென்றார்.

இந்த சம்பவத்தை அங்கிருந்த அநேகர் கவனிக்கவே இல்லை. சக்கரவர்த்தி தானும் கவனித்திருப்பாரோ என்பதும் சந்தேகமே, பலருடைய கவனத்தை கவரத்தக்கவாறு அங்கு ஒன்றும் நடைபெறவுமில்லை. இது தர்பார் தினத்தில் 12 மணிக்கு நிகழ்ந்தது. உடன் தானே, அங்கு வந்திருந்த, பிரசித்தி பெற்ற லண்டன் டைம்ஸ் (London Times) பத்திரிகையின் பிரதிநிதி இந்த அற்ப நிகழ்ச்சியைக் கூட்டிப் பெருக்கி மலையாக்கி, கெய்க்வார் சக்கரவர்த்தி தம்பதிகளுக்கு வணக்கஞ் செய்து இறங்கும் போது புறங்காட்டிச் சென்று சக்கரவர்த்தி தம்பதிகளை அவமதித்து விட்டதாக ஒரு தந்தி அனுப்பினார்.

அந்தத் தந்தியை அடிஸ்தானப் படுத்தி 'லண்டன் டைம்ஸில்' நீண்டதோர் தலையங்கமும் அன்று மாலை தானே வெளியாயிற்று. அந்தத் தலையங்கத்தின் சுருக்கத்தை ருயட்டர் கம்பெனியார் தந்தி மூலம் இந்தியப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தனர். தர்பாரை முன்னிட்டு டெல்ஹியிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த 'பயணியர்' (Pioneer) பத்திரிகையிலும் மறுநாள் காலையில் இதைப் பற்றி ஒரு தலையங்கம் வெளி வந்தது அப்பொழுதுதான் இந்த சமாசாரம் இந்தியர்களின் அறிவுக்குக் கொண்டு வரப் பட்டது. அதுவரையும் இந்த அசம்பவத்தைப் பற்றி ஒருவரும் நினைக்கவே இல்லை. இந்தியாவில் நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி லண்டன் பத்திரிகை மூலமாக இந்தியர் அறிய நேர்ந்ததும் கவனிக்கத் தக்கது. ஆங்கிலேயர்களுக்குப் பொதுவாக கேய்க்குவார் மீதுள்ள

பொறுமையின் காரணமாக இவ்வளவும் உண்டானதே அன்றி வேறில்லை.

பொறுமைக்குக் காரணம் இல்லாது யில்லை. கேய்க்வார் மேல் நாடுகளுக்குப் பல முறை பிரயாணம் செய்து ஐரோப்பியர்களுடனும் அமேரிக்கர்களுடனும் நன்கு பழகித் தேர்ந்தவராகையாலும் அநேக ஐரோப்பியர்களைத் தமது சமஸ்தானத்தில் உத்தியோகங்களில் வைத்து வேலை வாங்கியவர் ஆகையாலும், ஐரோப்பியர்களைக் கண்டால் மற்ற சுதேச மன்னர்களைப் போல் அவர் நடுக்கங் கொள்வது மில்லை ; மட்டுக்கு மிஞ்சி வணங்கி ஆதரிப்பது மில்லை.

அன்றியும், தர்பார் தினத்தன்று தேச மன்னர்களெல்லாம் அவரவர்கள் நாட்டாசாரப்படி யுள்ள அலங்கார உடைகளும் விருதுகளும் அணிந்து வர வேண்டுமென்று வைஸ்ராய் முன்னரே ஏற்பாடு செய்திருந்தனர். அவ்வேற்பாட்டின்படி மற்ற மன்னர்களெல்லாம் அலங்கார உடை அணிந்து ஜோதி ஸ்வரூபிகளாக வந்திருந்தனர். கேய்க்வார் மட்டுமே அவ் வேற்பாட்டின் படி வரவில்லை. அவர் சாதாரண ஒரு வெள்ளை யங்கி மட்டும் அணிந்திருந்தார். பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அவருக்கு அளித்துள்ள பட்டங்களின் அறிகுறியான பதக்கங்களனைத்தையும் அவர் அணிந்து கொள்ளவும் இல்லை. மார்பின் வலப்புறத்தில் ஒரே ஒரு ஆங்கலப்பதக்கமும் அதற்கு மேல் தமது சமஸ்தானத்துப் பட்டச்சின்னமான ஒரு பதக்கமும் மட்டுமே அவர் அணிந்திருந்தார். கையில் ஒரு சாதாரண மூங்கில் தடியும் தாங்கி யிருந்தார்.

இந்தத் தோற்றம் ஆங்கிலேயர்களுககுப் பிடிக்கவே இல்லை. மனப்பூர்வமாக அவ்வண்ணம் உடை அணிந்து வந்து சக்கரவர்த்தி தம்பதிகளை அவமதித்து விட்டதாக ஆங்கிலேயர் தப்பாக எண்ணிக் கொண்டார்கள்.

ஆனால் உண்மை அப்படியல்ல. கேய்க்வாருக்கு இயல்பாகவே ஆடம்பர உடையில் மிக வெறுப்பு.

இவ்வாறாகப் பொறுமையினாலும் தப்பெண்ணத்தினாலும் உருப்பெற்ற அபவாதம் உலகெங்கும் பரவிற்று. நிரபராதியான தன்மேல் உண்டான பழியை நினைந்து கேய்க்வார் மிக மனம் வருந்தினார். உண்மையை விளக்கி வைஸ்ராய்க்கு ஒரு கடிதமெழுதி அக கடிதத்தைப் பத்திரிகைகளிலும் பிரசுரித்தார். இக்குழப்பங்களை அறிந்த சக்கரவர்த்தி கேய்க்வாருக்கு ஒரு ஆறுதல் கடிதம் அனுப்பினார். அக் கடிதத்தில் கேய்க்வார் கூறும் விஷயங்கள் உண்மையென்று தாம் நம்புவதாகவும் கேய்க்வார் சக்கரவர்த்தியிடம் ஒரு விருந்துக்குச் செல்ல வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே மலைபோலெழுந்த புகார் பனிப்போல நீங்கிற்று.

தர்பார் முடிந்த பிறகு நான் பரோடாவுக்குச் சென்று துரைத்தன விருந்தினனாகச் சில நாள் தங்கினேன். அக்காலத்திய எனது

கேய்க்வார் மஹாராஜா

அநுபவங்களை யெல்லாம் விஸ்தாரமாகக் கூறலாமென்றால் 'லக்ஷ்மி' பத்திரிகை இடந் தருமோ வென்று அஞ்சுகிறேன். கேய்க்வாரது விசால மனப்பாங்கும் யாவரிடத்தும் ஸம நிலையில் கலந்து பழகும் சீரிய தன்மையும் என் மனதைப் பெரிதும் கவர்ந்து கொண்டன. கேய்க்வாரின் அரசாங்க வெற்றியின் முதற் காரணம் இதுவொன்றே யாம்.

சில வருஷங்களுக் கப்பால், திவான் வி. பி. மாதவராயர் சகிதம் கேய்க்வார் திருவிதாங்கூர் ஸமஸ்தானத்துக்கு விஜயம் செய்த பொழுது, பின்னும் ஒரு முறை அவர்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். கேய்க்வார் திருவனந்தபுரம் வந்த பொழுது நான் தூத்துக்குடியில் இருந்ததினால் திருவனந்தபுரத்திற்குச் சென்று பேட்டி காண எனக்கு முடியவில்லை. அவர்கள் கன்னியா குமரிக்கு வந்த பொழுது நான் சென்று பேட்டி கண்டேன்.

வி. பி. மாதவராய ரவர்கள் திருவிதாங்கூர் ஸமஸ்தானத்தில் திவான்ஜியாக இருந்த பொழுது அந்த சமஸ்தானக் குடிகளுக்குச் செய்த நன்மைகளின் நன்றி யறிதற் குறியாக கன்னியாகுமரிக்கு ஸமீபத்தி லிருந்த ஒரு சிறு கிராமத்துக்கு எனது பிரேரணையால் மாதவபுரம் என நாமஞ் சூட்டப் பட்டது.

கேய்க்வார் மஹாராஜா சகிதம் திவான் வி. பி. மாதவராயர் வந்திருப்பதை யறிந்த மேற்படி மாதவபுரம் ஜனங்கள் கேய்க்வாரையும் திவான்ஜியையும் தமது கிராமத்துக்கு அழைத்து அவர்களுக்கு ஒரு வந்தனோபசாரப் பத்திரமளிக்க எண்ணங் கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தனர்.

ஆனால் ஒரு திருவிதாங்கூர் உத்யோகஸ்தரின் சூழ்ச்சியினால் மாதவபுரத்தில் வைத்து அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரமளிக்க வசதி வாய்க்கவில்லை.

எனினும் வட்டக்கோட்டைக்குப் போகும் பிரயாண மத்தியில் கேய்க்வாரும் திவான்ஜியும் மாதவபுரத்தில் இறங்கினார்கள். மாதவபுரம் கிராமத்தாரின் பிரதி நிதியாக கேய்க்வாருக்கு மாலையணிய நான் முன் சென்ற பொழுது கேய்க்வார் கையமர்த்தி—"இது திவான் சாஹிபின் கிராமம். ஆகையால் திவான் ஸாஹிபுக்கே முதலில் மாலை சூடவேண்டும்" என்று புன்னகையோடு மொழிந்தனர். கேய்க்வார் விரும்பிய படியே மாதவராய ரவர்களுக்கு முதலிலும் கேய்க்குவாருக்கு இரண்டாவதும் மாலை யணிந்தேன். பின்னர் யாவரும் வட்டக் கோட்டைக்குப் போனோம்.

சுமார் 5½ மணிக்கு கேய்க்வார் ஜாகைக்குத் தயார் செய்யப் பட்டிருந்த ரெஸிடன்ஸி பங்களாவில் நாங்களனைவரும் திரும்பி வந்து சேர்ந்தோம்.

கேய்க்வார் தினந்தோறும் 7 மணிக்கு பகவத்கீதை வாசித்துக் கேட்பது வழக்கம். இடையில் சுமார் 1½ மணி நேரம் இருந்ததினால்

அந்தப் பொழுதை வீணுகப் போக்க கேய்க்வாருக்குப் பிரிய மில்லை. ஆகவே அந்த நேரத்துக்குள் பார்த்து வரக் கூடியதாக சமீபத்தில் ஏதேனும் ஸ்தலம் உளதோ என்று கேய்க்வார் திவான்ஜி யிடம் கேட்டார். திவான் என் முகத்தைப் பார்க்க "கோவகுளம் என்னும் ஒரு குக்கிராமம் சமீபத்தில் இருக்கிறது" என்றேன். உடனே யாவரும் கோவ குளத்துக்குப் புறப்பட்டோம்."

கோவகுளம் கன்னியாகுமரிக்கு மேற்கே உள்ள ஒரு கடற் கரைக் கிராமம். கத்தோலிக் கிறிஸ்தவர்களான பரதர்கள் அவ்விடம் வசித்து வருகிருர்கள்.

நாங்கள் கோவகுளம் கத்தோலிக் தேவாலயத்தை அடைந்த பொழுது கோவில் கணக்குப் பிள்ளையைத் தவிர வேறெவரும் அங் கில்லை. கணக்குப் பிள்ளைக்கும் வந்திருப்பவர் மஹாராஜா என்று தெரியாது. முன்னும் பின்னும் துருப்புகள், ஆட்களை அடித் தோட்டச் சேவகர்கள், பளபளப்பான உடை இவைகளல்லவா ராஜச் சின்னங்கள். கேய்க்வாரிடம் இவை யொன்றுமே கிடையா.

கோவில் கணக்குப் பிள்ளையிடம் அவ்வூர் வரலாற்றைப் பற்றி கேய்க்வார் பல கேள்விகள் கேட்டார். அர்ச் சவேரியார் நாக பட்டணம் முதல் கொச்சிவரை யுள்ள கடற் கரைவாசிகளை எல்லாம் கிறிஸ்தவர்கள் ஆக்கிய வரலாற்றையும் மற்றும் அவர்கள் வாழ்க்கை முறைகளையும் பற்றி விஸ்தாரமாகக் கணக்குப்பிள்ளை தமிழில் கூறினர். நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கேய்க்வாருக்குத் தெரிவித்தேன். இதற்குள் வந்திருப்பவர் பரோடா மகாராஜா வென்று அங்குள்ளவர்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. தெரியவே ஒருவன் கோவில் கூட்ட மணியை அடித்து விட்டான். உடனே அக்கி ராமத்தில் உள்ள ஜனங்கள் எல்லாம் ஆபாலவிர்த்தம்கோவிலில் வந்து கூடினர். ஒரு நிமிஷ நேரத்தில் அங்கு குழுமிய சுமார் 1000 ஏழை ஜனங்களைக் கண்டதும் கேய்க்வாருக்குப் பரமாநந்தம் உண்டாயிற்று.

அக்கூட்டத்திலிருந்து ஒருவனை அழைத்து "நீ எந்த பாஷை யில் ஜெபம் பண்ணுகிருய்" என்று மகாராஜா கேட்டார். லத்தின் பாஷையில் ஜெபம் செய்கிறதாக அவன் சொன்னுன். ஜெபம் கேட்க விரும்புவதாக கேய்க்வார் கூற அம் மனிதன் யாவரும் கேட் கும்படி ஜெபம் செய்தான். பிறகு கேய்வார் "ஜெபத்தின் அர்த் தம் தெரியுமா" என்று அவனைக் கேட்டார். தெரியாதென்று அவன் பதிலுரைத்தான். ஜெபத்தின் பொருள் அறியச் சக்தியில் லாமல் கிளிப் பிள்ளை போல் குரு கற்பித்தவைகளைக் கூறிக் கொண் டிருப்பதைப் பற்றி கேய்க்வார் பெரிதும் வியப்படைந்தார்.

அங்கு நின்ற ஜனங்களெல்லாம் கந்தையும் கரித்துணியும் அணிந்து அநாகரீகத் தோற்ற முடையவர்களாய் இருப்பதைப் பார்த்து கேய்க்வார் மனம் வருந்தி :—"ஐயோ! புண்ணியாத்மா வான அர்ச் சவேரியார் இவருடைய மூதாதைகளை 400 வருஷங்

களுக்கு முன் கிறிஸ்தவர்கள் ஆக்கினர். 400 வருஷங் களுக்குப் பின்னும் இவர்கள் தம் மூதாதையர்களைப் போல் அநாகரீகர்களாகவும் வறியராகவுமே காணப் படுகிறார்கள். அர்ச் : சவேரியார் இப்பொழுது வந்தால் இக்கொடிய காட்சியைக் காண மனம் பொறுப்பாரா ?" என்று வெகு உருக்கமாகக் கூறினர். அம்மொழிகள் இப்பொழுதும் என் காதில் தொனிப்பன போல் தோன்றுகின்றன.

கேய்க்வார் அதி தீட்சண்யமான ஞாபக சக்தி யுடையவர். அதை விளக்க ஒரு திருஷ்டாந்த மட்டும் கூறி இவ் வியாசத்தை முடிவு செய்கிறேன்.

பரோடா அரசாங்கத்தில் உத்தியோகம் நடத்திப் பென்ஷன் பெற்ற வீரராயர் என்னுமொருவர் இப்பொழுதும் திருநெல்வேலியில் வசித்து வருகிறார். கேய்க்வார் திருநெல்வேலியில் வந்த பொழுது வீர ராயர் பேட்டி காணப் போனார்.

அவரைக் கண்டதும் அவருடைய உத்தியோக வரலாறுகளை யெல்லாம் கூறி கேய்க்வார் அவரை அன்புடன் ஏற்று உபசரித்தார்.

மற்ற அரசர்களைப் போல் கேய்க்வார் வீண் விநோதத்தின் பொருட்டுத் துரைத்தனப் பணத்தைச் செலவு செய்து வெளி நாட்டுப் பிரயாணம் செய்வதில்லை. தூக்கமின்மை என்னும் வியாதியின் நிவர்த்திக்காகவே டாக்டர்கள் அபிப்பிராயப்படி அவர் அடிக்கடி வெளி நாடு செல்வது. இப்பொழுதும் வாத நோயால் அடிககடி வருந்துவதனால் டாக்டர்கள் உபதேசப்படி சீமைக்குப் போகப் போகிறார்.

இத்தகைய பெருந்தகைக் குணங்களுக்கு இருப்பிடமான கேய்க்குவார் மஹாராஜாவின் குடும்ப வாழ்வு சிறிது துக்க பூரிதமாயிருப்பதைப் பற்றி மிக வருத்தத்தோடு கூற வேண்டியதா யிருக்கிறது.

அவர் முதலில் தஞ்சாவூர் அரண்மனையிலிருந்தது ஒரு ராஜ குமாரியை விவாகம் செய்தார். அந்த ராணியார் ஒரு புத்திரனைப் பெற்ற பிறகு மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். அப் புத்திரனை பட்டிசிங் ஆக்ஸ்போர்ட் கலாசாலை மாணவனுயிருந்த காலத்து உயிர் துறந்தார். அவருக்கும் ஒரு ஆண் மகவுண்டு.

தற்காலத்திய ராணியான இரண்டாவது மனைவிக்கு மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் உண்டு. புத்திரர்கள் மூவரும் அடுக்கடுக்காய் இறந்து போயினர். புத்திரியும் குச்பீஹார் மகா ராஜாவுக்கு வாழ்க்கைப் பட்டு ஒன்றோ இரண்டோ குழந்தைகளைப் பெற்ற பிறகு விதவை யாயினள்.

முதல் மனைவி தஞ்சாவூர் ராணியின் பேரப்பிள்ளைதான் பட்டத்துக் குரியவராக இப்பொழுது இருக்கிறார். அவருக்கும் விவாகமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது.

உத்தம தம்பதிகளுக்கு உலகத்தில் இத்தகைய துன்பங்களை அளித்துச் சோதனை செய்வது இறைவன் திருவருள் போலும்!

ஸ்ரீமாந் எம். எஸ். திருவாரியன் பிள்ளை.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

338-ஆம் பக்கம் தொடர்ச்சி.

(ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

கண்ணிழந்தமை.

எல்லையைக் கடந்த அந் நிமிஷமே இரண்டு கண்களும் பொட்டென மறைந்தன. ஆரூரரும் மூர்ச்சித்தனர். பின்னர்ச் சிறிது கலக்கந் தெளிந்து சங்கிலியார் பொருட்டுச் செய்த சபதம் பங்கப்பட்ட காரணத்தாற் கண்கள் மறைந்தன; இத்துயர் நீங்கப் பாடுவேன் எனத் தேறி—

"அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவு நான்படப் பாலதொன் றானாற்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே"

எனவரும் 54-ஆவது திருப்பதிகத்தைப் பாடினர். பாடியும் பார்வை வரவில்லை. மீண்டு திருவொற்றியூருக்கு வந்தால் ஊர் பழிக்குமே என மிக வெள்கி, ஆரூரைத் தொழும் ஆசையே மேலிட வழிப் போவார் வழிகாட்ட திருமுல்லைவாயில் என்னுந் தலத்தைப் பரவித் திருவெண்பாக்கம் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து கடவுளைப்பரவி "கோயிலுள் இருக்கின்றீரோ" எனப் பணியத் தோழனாய் இருந்த இறைவன் அயலார் போல ஒரு ஊன்றுகோலைத் தந்து "உளோம் போகீர்" என்றார்—அதுகேட்ட ஆரூரர்

"பொன்னவிலுங் கொன்றையினாய் போய்மகிழ்க்கீ ழிருவென்று
சொன்னவெனைக் காணமே சூளுறவு மகிழ்க் கீழே
என்னவல்ல பெருமானே யிங்கிருந்தா யோவென்ன
ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம்போகீ ரென்றானே."

எனவும்,

"உலகமெலாம்—
ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ன
ஊன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே—

எனவும் வரும் (89-ஆவது) திருப்பதிகத்தைப் பாடித் துக்கித்து இதுவும் அவனருள் எனச் சிந்தித்துப் பழைய னூர், திருவாலங்காடு, திருவூறல், (தக்கோலம்) என்னுந் தலங்களை வணங்கிக் காஞ்சிமாநகர் வந்து சேர்ந்தனர்.

இடக்கண் பார்வை பெற்றது.

சேர்ந்து காமாக்ஷியம்மையை வணங்கிப் பின்னர் ஏகாம்பரேசுரர் முன்னிலையில் நின்று "பெருவிட முண்ட கண்ணாளா! கச்சி யேகம்பனே! முக்கண் மூர்த்தியே! பன்னிருகண் படைத்த குமரன் தாதையே! என் பிழையைப் பொறுத்து யான் காணக் கண்ணளித்தருளாய்! பவள வண்ணனே!" எனப்போற்றி வீழ்ந்து வணங்கினர். இறைவனும் இரங்கி இடக்கண் பார்வையைக் கொடுத்தார். ஆரூரரும் பெரிதும் மகிழ்ந்து இறைவன் திருக்கோலத்தைத் தரிசித்து ஆடிக்களித்து

"ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதியை அமரர் தொழு தேத்துஞ்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பா ரவர் சிந்தையுளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே"—

எனவரும் (61-ஆவது) திருப்பதிகத்தைப் பாடினர். அதன் பின்னர் அத்தலத்தினின்றும் புறப்பட்டு

"அந்தியு நண்பகலு மஞ்சு பதஞ்சொல்லி
முந்தி யெழும் பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென் திரு வாரூர் புக்
கெந்தை பிரானாரை யென்றுகொ லெய்துவதே."

எனவரும் (83-ஆவது) திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருவாரூரையே சிந்தித்துச் செல்வதாயினர். வழியில் திருவாமாத்தூர், திருவரத்துறை, திருவாவடுதுறை என்னுந் தலங்களைப் பரவித் திருத்துருத்தி (குற்றாலம்) வந்துசேர்ந்தார். கண் மறைந்த காலத்து உடம்பிலும் கடும்பிணி யொன்று ஆரூரருக்கு உற்றது போலும். அப் பிணி நீங்க வேண்டித் துருத்தியி லுறையுஞ் சிவ பரத்தினை வணங்கி ஆரூரர் எனது பிணிகெட அருளுதி என இரக்க, இறை

வன் "வடபாலுள்ள திருக்குளத்திற் குளி" எனக் கட்டளையிட்டனர். அவ்வாறே அத் தீர்த்தத்தில் மூழ்கி யெழுந்தவுடன் புதிதாய் வந்த அப்பிணி நீங்கி அக்கணமே மணியொளிசேர் திருமேனியை யடைந்தனர். கண்டவர்கள் அதிசயித்தனர். ஆரூரரும் திருக்கோயிலுக்குட் சென்று

"மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடில்படக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்று
மன்னமாங் காவிரி யகன்கரை யுறைவா
ரடியிணை தொழுதெழு மன்பரா மடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனே னாயே
னென்னை நான் மறக்குமா றெம்பெரு மானை
யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை."

எனவரும் (74-ஆவது) திருப்பதிகத்தைப் பாடினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூர் நோக்கிவந்தனர்.

வலக்கண் பார்வையையும் பெற்றது.

ஆரூர் எல்லையைக் கண்டனர். எல்லையிலாக் காதல் கொண்டனர். ஒற்றைக் கண்ணாற் கண்டதனால் தமது ஆசை நிரம்ப இல்லை. அந்தி வேளையில் ஆரூர் புக்குப் பரவையுண் மண்டளியில் அமர்ந்திருக்கும் பரசிவத்தைத் தரிசித்து அர்த்தயாம தரிசனத்துக்கு மூலட் டானரிடம் வந்து சேர நினைந்து,

குருகுபா யக் கொழுங் கரும்புக ணெரிந்தசா
றருகுபா யும்வய லந்தணா ரூரரைப்
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைத்
தருகுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே.

எனவரும் (37-ஆவது) திருப்பதிகத்தைப் பாடி, மற்றைக் கண்ணையுந் தாரீர் என வணங்கி—

"மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
யாளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே."

"விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட் பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை ; * கொத்தை யாக்கினீர்
ஏற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிபட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே."

எனவரும் (95-ஆவது) திருப்பதிகத்தைத் தமக்குள்ள

* கொத்தை = குருடு.

தோழமைத் திறத்தாற் சொந்தமாகப் பாடிட, கந்தவேளைப் பெற்ற கருணாகர மூர்த்தியும் அன்பர்படும் வேதனைக் கிரங்கி வலக்கண் பார்வையைத் தந்தருளினர். ஆரூரரும் பெரிதும் மகிழ்ந்து உள்ளம் பரவசமாய்ப் பன்முறை வீழ்ந்து வணங்கினர். களிப்பினல் ஆடினர், பாடினர், இன்ப வெள்ளத்தி லழுந்தினர், புற்றிடங் கொண்ட பவளச் சிவக்கொழுந்தை இருகண்ணாலுங் கண்டு அவர் அருளைப் பருகிப் பருகிப் பேரானந்த முற்றனர்.

(இன்னும் வரும்.)

ஞாபக விருத்தி

1. முற்காலத்திருந்தோர் சிலர் எவ்வளவு ஞாபக சக்தி பெற்றிருந்தன ரென்பதை மாத்திரம் இங்கு கவனித்தால் நமக்கு நமது ஞாபகத்தை விருத்தி செய்ய ஓர் ஆசை உண்டாகு மென்பதி லையமில்லை. ஆதலின், வில்லியம் வாக்கர் அட்கின்ஸன் தெரிவிக்கும் சிலரைப்பற்றி மாத்திரம் இங்கு கவனிப்போம்.

2. (Grotius) குரோட்டியஸ் என்பவரும் பாஸ்கல் (Pascal) என்பவரும் தாங்கள் எப்பொழுதாவது வாசித்ததையோ அல்லது யோசித்ததையோ ஒரு பொழுதும் மறந்ததில்லையாம். கார்டினல் மெசபான்றி (Cordinal Mezofanti) என்பவர், தான் நூறு பாஷைகளுக்கு அதிகமாக அறிந்தும், ஓர் முறை கற்ற வார்த்தையைக்கூட மறந்ததில்லை யென்கின்றூர். ஓர் கிராமத்தின் மயான வேலைக்காரன், முப்பத்தைந்து வருடத்தில் எந்தத் தேதியில் யார் யார் இறந்ததென்றும், இறக்கும் பொழுது வயதிவ்வள வென்றும், கூட வந்திருந்தோர் இன்னின்னரென்றும், சொல்லும் ஆற்றலுடன் விளங்கினனென்று, ஒருவர் எழுதுகின்றூர்.

3. இரண்டாயிரம் வார்த்தைகளை ஓர் முறை கூறக்கேட்டு 'செனிக்கா' (Seneca) என்பவர் தனது ஞாபக சக்தியால் முந்திய முறை பிறழாது கூறிவந்தார். அவருடைய நண்பர் போர்ட்டிரஸ் லாட்டியோவும் (Potirus Lotio) தான் செய்துள்ள பிரசங்கங்களை ஒரு பொழுதும் மறந்ததாவது வார்த்தை வராது இடர்ப்பட்டதாவது கிடையாது. சினியாஸ் என்ற இராஜாங்க உத்தியோகஸ்தன் ஓர் தினத்தில் ஒரு பெரிய கூட்டத்தில் ஒவ்வொருவரின் பெயரையும் அறிவிக்கப் பட்டான். மறுநாள் அதில் யாரைக் கண்ட போதிலும், பெயரை மறவாமல் கூறி சலாஞ்செய்தானும். தனது சேனையில் ஒவ்வொரு வீரனுடைய பெயரையும் 'சைறஸ்' (Cyrus) என்ற அரசன் அறிந்திருந்தாரென்று சொல்லப் படுகின்றது.

4. 'அகஸ்டைன்' (Augustine) என்பவரது நூல்களிலிருந்து கூறும் ஒவ்வொரு மேற்கோளும் இன்ன பக்கத்தில் இன்ன வரியில் இருக்கிறதென்று பிராசின்ஸ் லாரஸ் (Francis Laurez) கூறிவந்தார். ஏதென்ஸ் நகரத்திலிருந்த இருபதினாயிரம் ஜனங்களின் ஒவ்வொரு பெயரையும் 'தெமிஸ்டாக்கிலிஸ்' (Themistocles) வேண்டும்பொழுது கூறியதுண்டு.

5. கார்சிக்காவில் ஒருவன் ஓர் முறை சொல்லக் கேட்ட முப்பத்தாறாயிரம் வார்த்தைகளை அதே முறையிலோ அல்லது தலை கீழாகவோ சொல்வது வழக்கமென்று (Muretus) முறிட்டஸ் எழுதியிருக்கின்றார். மேலும் அவனிடத்தில் ஒருவன் போய் தனது ஞாபகத்தின் கேவல நிலைமையைத் தெரிவிக்கவே, பத்துப்பதினைந்து நாட்களுக்குள் அவனது ஞாபகம் பலப்படும்படி செய்து விட்டான்; பின்னர் ஐந்நூறு வார்த்தைகளை ஓர் தடவை கேட்டால், மறுபடியும் தவறாது கூறத் தலைப்பட்டு விட்டான்.

6. புத்தக சாலையைப்பற்றிய ஞாபகத்தில் (Magliabechi) மிகப் பிரசித்தி பெற்று விளங்கினார். உலகத்திலுள்ள எந்தப்பெரிய புத்தக சாலையிலும் இன்னவிடத்தில் இன்ன புத்தகமுண்டென்பது அவருக்கு ஞாபகமிருந்தது. அதை ஓர் சமயம் சகலரும் தெரிந்து கொள்ள நேர்ந்தது. துஸ்கானி (Tuscaney) டியூக் ஓர் அரிய புத்தகம் எங்கே காணப்படுமென்று கேட்டபொழுது, கான்ஸ்டாண்டிநோபிலுள்ள பெரிய புத்தக சாலையில் வாசலுக்கு வலது பக்கத்திலுள்ள மூன்றாவது பீரோவில் ஏழாவது தட்டில் ஒரு காப்பி மாத்திரம் நீர் கேட்கும் புத்தகத்தில் இருக்கிறது என்று பதில் விடுத்தாராம்! ஆ! என்னே இவரது ஞாபகம்.

7. இலியட் (Iliad), ஒடிசி (Odyssey) என்ற இருபெரும் நூல்கள் முழுவதையும் ஒரு மாதத்துக்குள்ளும், ஏனைய கிரேக்க கவிஞர்களின் நூல்களனைத்தையும் மூன்று மாதத்துக்குள்ளும் பாராமல் ஒப்பிக்குமளவு கூடப்படித்த ஜோசப் ஸ்காலிகர் (Joseph Scaliger) தனது ஞாபக சக்தி மிகவும் கேவலமென்று கூறுவாரேயானால், நம் நிலைமை என்னாகும்!

8. முடிவில், நம் நாட்டிலும் இத்தகைய சிலருளரென்பது நிராக்ஷேபமானதே. ஆயினும், பொது ஜனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு ஞாபக சக்தியில் அதிகரிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு தான் அத்தேசம் சிறப்படையுமென்பது திண்ணம். ஏனெனில் எவ்வளவு வாசித்தும் ஞாபகமில்லாவிடின், என்ன பயன்? ஒவ்வொருவரும் கற்றதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டுதான் புதிதாய்க் கற்க ஆரம்பிக்கவேண்டும்.

"வருந்தித் தாங்கற்றன வோம்பாது மற்றும்
பரிந்து சில கற்பான் றொடங்கல்—கருந்தனம்,
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப் பரித்தாங்
கெய்த்துப்பொருள் செய்திடல்."

விவசாயப் பண்ணை

விவசாய சாஸ்திரத்தில் நிபுணரென்று ஸன்னது
பெற்றவரும் அனுபவ கிருஷிகருமான

ஸ்ரீமாந் பாதூர். வே. ராஜ கோபாலாச் சாரியார் எழுதியது.

சகல உரிமைகளும் ஆசிரியருக்கே.

ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு நிலம் வேண்டும்?

ஒரு சாதாரண குடும்பம் செவ்வனே போஷிக்கப் படுவதற்கும் விவசாயத்தைத் திறமையாக நடத்துவதற்கும் ஏற்ற விவசாயப் பண்ணையின் விஸ்தீரணம் எவ்வளவு இருத்தல்வேண்டும்? "அதிக லாபத்தை நான் அடையவேண்டுமானால் நான் எவ்வளவு நிலம் வாங்கவேண்டும்" என்றும் "பெரிய பண்ணைகளிலிருந்து அதிக லாபம் வருமா? சிறு பண்ணைகளின் விவசாயத்தை ஏற்றுக்கொண்டால் அதிக லாபம் அடையலாமா?" என்றவை போன்ற பண்ணையின் பரப்பைப் பற்றின பல கேள்விகளும், சந்தேகங்களும் பலருக்கு எழுவதை நான் அறிந்திருக்கிறேன். தந்தை தேடி வைத்திருந்த திரவியத்தைத் தற்காலத்திய சர்வகலாசாலைப்படிப்பிற்குக் கொட்டிப் பட்டதாரி யான பிறகு ஒரு வேலையும் அகப்படாமல் திண்டாடும் நமது படித்த வாலிபர்களுக்கு ஒருவாறு வழிகாட்டியாக இருக்கும் பொருட்டு இவ்விதமில் பண்ணையின் பரப்பைப் பற்றி எழுதப் பட்டிருக்கிறது. சர்வேச்வரனது அருளும் "லக்ஷ்மி"யின் பரிபாலகர்களின் அன்பும் நான் அடைவேனாயின் தமிழ்நாடு லக்ஷ்மி கடாக்ஷத்திற்குப் பாத்திரமாவதற்கு உவந்த விவசாய சம்பந்தமான வியாசங்கள் பல "லக்ஷ்மி"யில் எழுத இருக்கிறேன்.

ஏராளமான விஸ்தீரணத்தையுடைய பண்ணையாக ஒருவனுக்கு இருந்தால்தான் விவசாய சாஸ்திரத்தை யொட்டியும் அதிக லாபந் தரத் தக்கதாகவும் பண்ணையை நடத்தமுடியும் என்ற எண்ணம் நாட்டில் பெரும்பான்மையோரிடத்து இருந்து வருகிறது. இந்த எண்ணத்தை முற்றிலும் தவறெனக்கூறி ஒதுக்கிவிட முடியாது. ஆயிரக்கணக்கான வேலி (வேலி = சுமார் $6\frac{1}{2}$ ஏக்கர்) பூஸ்திதியுடைய நிலச்சுவான் தார்களுக்கு லக்ஷக்கணக்கில் கடன் இருந்து வருகிறதையும் நாம் பார்த்துக்கொண் டிருக்கிறோம். ஒரு காணி நிலத்தை யுடையவன் ஆயிரக்கணக்கில் பணத்தை வட்டிக்கு விட்டு வருவதையும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். ஒரு பண்ணையில் வேலை செய்துகொண்டிருப்பவன் தனது உழைப்பினால் பெரிய பண்ணைக் குடையவனாக ஆவதையும் பெரிய பூஸ்திதி படைத்தவர் பிச்சைக்காரனாவதையும நாம் பார்த்திருக்கிறோம். ஆதலால்

பூஸ்திதியின் பரப்பைப்பற்றிய கேள்விக்கு மிகவும் சுலபமாகப் பதிலளிக்க முடியவே முடியாது. ஏனெனில் கேள்வி சிறியதாயினும் அது பல அம்சங்களைப் பொறுத்ததா யிருக்கிறது.

இக்கேள்விக்குப் பதிலளிக்க வேண்டுமானால் எந்த விதமான கிருஷியில் நமது மனம் நாடுகிற தென்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். பூமியின் வளம், இயற்கை, பாகுபாடு முதலியன நமக்கு நன்றாய்த் தெரியவேண்டும். நிலம் நீர்வள முளதா? நஞ்செயா? புஞ்செயா? தோட்டக்காலா? என்று ஏற்படவேண்டும். போக்கு வரவுக்குரிய சாதனங்களான ரஸ்தாக்கள் இருக்கின்றனவா? நிலத்தில் உற்பத்தியாகும் விளைபொருள்களை உடனுக்குடனே அருகில் நல்ல விலைகொடுத்து வாங்கக்கூடிய சந்தைகளும் கடைகளும் இருக்கின்றனவா? என்றும் அறிந்துகொள்ள வேண்டும். கூலியாட்களும் பண்ணையாட்களும் வெகு சுலபமாகக் கிடைப்பார்களா? கிடைத்தாலும் அவர்கள் நல்ல வேலைசெய்யக் கூடியவர்களா? என்றும் நமக்குத் தெரிந்திருத்தல் வேண்டும். சீதோஷ்ண ஸ்திதியும், மாரி பொழியும் அளவும், காலமும் தெரிந்து கொள்ளவேண்டும். இவைகளையும் தவிர்த்து இன்னும் பல அம்சங்களைப் பொறுத்திருக்கின்றது இந்த விஸ்தீரணத்தைக் குறித்த ப்ரச்னை.

பல்லாரி ஜில்லாவில் சராசரி ஒரு குடும்பத்திற்கு 25 ஏக்கர் முதல் 35 ஏக்கர் வரையில் நிலமிருந்தும் அதிலிருந்து கிடைக்கும் வருமானம் அப்பூமிக் குடையவன் குடும்பத்தை ரக்ஷிக்கப் போதுமானதாக ஏற்படவில்லை. அங்கே மாரி அற்பம். அதுவும் காலத்தில் பொழிவதில்லை. பூமியோ வெறும் களிமண் நிலம். கொஞ்ச மழை பொழிந்தாலும் பூமி உளையும் சேறு மாய்விடும். காய்ந்தாலும் பூமி பாளம் பாளமாக வெடித்துப்போகும். இது விவசாயம் சரிவரச்செய்வதற்கு ஏற்ற பூமியன்று. ஆழமாக உழவே முடியாது. அதிக விசாலமான விஸ்தீரணம் ஒவ்வொரு குடியானவனுக்கும் அங்கே இருப்பதால் கிருஷி சாஸ்திரோக்தமாகச் செய்யமுடிவதில்லை. ஏராளமான விஸ்தீரணத்திற்கு ஒரு குடியானவன் எவ்வாறு சரிவர உரமிட முடியும்? அவன் உரத்திற்குத் தான் எங்கேபோவான்? அகப்பட்டு ஏராளமான உரத்தையிட்டாலும் உரமிடுவதற்குத் தகுந்தபலன் இந்தப் பிராந்தியங்களில் கிடைக்கின்றதா? இவை யெல்லாவற்றையும் ஒருங்கே யோசிப்போமாயின் பல்லாரி கடப்பை ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் தற்போது செய்துவரும் கிருஷிமுறையே அந்தப் பிராந்தியங்களில் செய்யத் தகுந்தது என்று கொள்ளவேண்டி யிருக்கிறது. இத்தகைய ப்ரதேசங்களில் ஒரு விவசாயியின் குடும்பம் செவ்வனே போஷிக்கப் படுவதற்குக் குறைந்தது 35 ஏக்கர் நிலம் இருந்துதான் ஆகவேண்டும். பல்லாரி ஜில்லா கரிசல் காட்டில் செய்யப்படும் முக்கியப் பயிர்களாவன சோளமும் பருத்தியுமே. இவ்விரண்டையும் கலப்புப் பயிராகத்தான் பல இடங்களில் பயிர் இடுகிறார்கள்.

இந்த 35 எக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்திலிருந்து வருஷத்தில் கிருஷிச் செலவு போக ரூ. 500 கிடைப்பதே மிகவும் துர்லபம்.

இதே களிமண் பூமி திருநெல்வேலி ஜில்லாவில் கோயில்பட்டிக்குச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் ஒரு கிருஷிகன் குடும்பத்தைக் காப்பாற்ற பத்துமுதல் பதினைந்து ஏக்கர் வரையில் இருந்தால் போதுமானதாக இருக்கிறது. காரணமோ மழை பல்லாரியைவிட இங்கு அதிகம். இந்த மழையும் நல்ல சமயத்தில் பொழிகிறது. இதையும் தவிர்த்து பல்லாரிக்கரிசல் காட்டைவிடத் திருநெல்வேலிக் கரிசல் வளமுள்ளதாக இருக்கிறது. பல்லாரிப் பூமியைப்போல் அவ்வளவு இறுக்கும் படியான இயற்கைப் பாகுபாடும் திருநெல்வேலிப் புஞ்சைக் காட்டுக்குக்கிடையாது. பருத்திச் சாகுபடியே இந்த பூமியில் செய்யப்பட்டாலும் கண்டுமுதல் பல்லாரிப் பிரதேசங்களைவிட இருமடங்கு கிடைக்கிறது. ஆதலால் பல்லாரிப்பிராந்தியத்தில் தேவையாக இருக்கும் விஸ்தீரணத்தில் பாதி யிருந்தாலே திருநெல்வேலி விவசாயி சுகமாகக் காலத்தைக் கழித்துவிடுவான். வருஷம் ஒன்றுக்கு 2,500 க்கும் குறையாமல், உப்பம் பருத்தியோ கருங்கண்ணிப் பருத்தியோ பயிர்செய்து சம்பாதித்து விடுகிறான்.

திருநெல்வேலி ஜில்லாவில் தோட்டக்கால் பூமிகளில் மிளகாய் சாகுபடிசெய்து ஏராளமான லாபத்தை அடைவதையும் நாம் பார்த்துக்கொண்டுதான் வருகிறோம். இத்தகையத் தோட்டக்கால் நிலத்தினின்று வருஷம் ஒன்றுக்கு ஒரே ஏக்கரிலிருந்து சராசரி ரூ. 1,000க் குறையாமல் கிருஷிகர்கள் இங்கே சம்பாதித்து விடுகிறார்கள். இந்தப் பிராந்தியங்களில் ஒரு கிருஷிக் குடும்பத்தைக் காப்பதற்கு ஒரு ஏக்கர் நிலமே மிகவும் அதிகமாகத் தோன்றுகிறதல்லவா?

சிதம்பரத்திற்கு அடுத்த சிவபுரியில் கால் ஏக்கர் புகையிலை நடத்தகுந்த நிலம் இருந்தால் போதுமானது. ஈரோட்டுக்கு அருகாமையில் காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தின் கீழ் வாழை நடத் தகுந்த ஒரு ஏக்கர் நிலமிருந்தாலும் அது ஒரு கிருஷிகனது குடும்பத்தைச் செவ்வனே போஷித்துவிடும். பெங்களூருக்கு அருகில் வீசம் காணி தோட்டக்கால் பூமியிருந்து அதில் சதா காலமும் கவனம் செலுத்தக்கூடிய ஒரு கிருஷிகன் சீமை கறிகாய்ப் பயிரைக் கிருஷிசெய்து கொண்டு வந்தால் அதிலிருந்து கிடைக்கும் ஊதியம் பல்லாரிப் பிராந்தியத்தில் 35 ஏக்கர் வைத்தாளுவதால் கிடைக்கும் லாபத்தைவிட அதிகமாக இருக்கும். பெரிய நகரங்களுக் கருகில் கறிகாய்த் தோட்டப்பயிர் செய்வதே அதிக லாபத்தை தருகிறது. உரத்தையும் நீரையும் அதிகமாக இட்டு நல்ல லாபத்தை அடையக் கூடிய இடமும் இதுவே. எரு, குப்பை முதலியன ஏராளமாக பட்டணங்களிலே சுலபமாக விலைக்கு கிடைக்கும். கறி காய்களை வெகு சுலபமாக அன்றாடம் நல்ல விலைக்கும் விற்கமுடியும். இதே ஸ்திதியில் தானிருக்கிறது பூந்தோட்டங்களும், பழத் தோட்டங்

க்ளும். பால் கறக்கும் பசுக்களைப் பட்டணங்களுக் கருகில் வைத்து மாட்டுத் தீவனத்திற்கான பயிர்வகைகள் செய்து இத்தீவனப் பயிர்களைப் பசு மாடுகளுக்குத் தீனியாக உபயோகிப்பதால் அதிக லாபம் அடைய மார்க்க முண்டு. மாட்டுத் தீவனத்திற்காக ஒரு பண்ணை ஏற்படுவதாக இருந்தால் விஸ்தீரணம் அதிகமாகத் தான் இருக்க வேண்டும்.

சுமாராகச் சராசரி லாபத்தைக் கவனித்துப் பண்ணையின் விஸ்தீரணத்தை நிர்த்தாரணம் செய்யப் பார்ப்போம். ஏற்கனவே இவ் வியாசத்தில் சொல்லியிருக்கிறபடி சுமார் ரூ. 400 ஒரு கிருஷிகன் நிகரமாக அடைவதற்குப் பல்லாரிப் பிரதேசங்களில் 35 ஏக்கர் பூமியை வைத்தாளவேண்டும். திருநெல்வேலி ஜில்லாவில் 15 ஏக்கர் பருத்திக்காடு இருந்தாலும் இந்த 500 ரூபாய் சுலபமாகச் சம்பாதித்துவிடலாம். ஒரு ஏக்கர் மிளகாய்ச் சாகுபடி செய்யக்கூடிய தோட்டக்கால் நிலமிருந்தாலும் எல்லா கிருஷிச்செலவும் நீங்கலாக நிகரமாய் ரூ. 500 சம்பாதித்துவிட முடியும். தாம்பிரபர்ணிப் பாசனத்தின் கீழுள்ள நஞ்சை நிலமாக இருந்தால் இந்த நிகரவருமானமடைய குறைந்தது 5 ஏக்கர் நிலமாவது வேண்டும். மதுரைப் பெரியாறு பாசனத்தின் கீழுள்ள நிலமாக இருந்தால் 10 அல்லது 12 ஏக்கர் நிலம் வேண்டும். தஞ்சாவூர், திருச்சிறுப்பள்ளி ஜில்லாக்களில் காவிரிப் பாசனத்தின் கீழ் உள்ள நெல் சாகுபடி நிலங்களாக இருந்தால், ஒரு வேலி பூமி யிருந்தால் தான் இந்த ரூ. 500 நிகர லாபம் ஒரு வருஷத்தில் சம்பாதிக்க முடியும். ஆனால் வாழை நடக்கூடிய பூமியாக அமைந்திருந்தால் இரண்டு ஏக்கர் இருந்தால் இந்த வருமானத்தைச் சுலபமாக சம்பாதித்து விடலாம்.

சிதம்பரத்திற்கு அருகிலுள்ள சிவபுரியில் ஒருவகை "வாய்க்குப் போடும் புகையிலை" பயிரிடப்பட்டு வருகிறது பலரும் அறிந்ததே. வெற்றிலை பாக்குடன் உபயோகிக்கப்பட்டு வரும் புகையிலை வகைகளில் இதுவே சிறந்ததென இந்த உபயோகிப்போரின் கருத்து. சிவபுரிப் புகையிலையை உபயோகிப்போருக்குத்தான் தெரியும் இதன் குணமும் அதற்கு அவர்கள் கொடுக்கும் விலையும். ஒரு இலை சராசரி 2 அணுவிற்கு எப்பொழுதும் குறைவுபடாது. சில சமயங்களில் ஒரு இலை அரை ரூபாய்க்கும் விற்பதுண்டு. கஜத்திற்கு ஒரு செடியில் 12 இலைகளுக்கு மேற் போகாமல் விட்டு வைக்கிறார்கள். இந்த 12 இலைகள் உள்ள ஒரு செடியினின்று ரூ. 1-8-0 கிடைக்கிறது. 4,840 சதுர கஜமுள்ள ஒரு ஏக்கரில் 4840 செடிகள் இருக்கும், 840 செடிகளை ஒதுக்கி விட்டாலும் காத்திரமாக 4000 செடிகள் இருக்கும். இந்த நாலாயிரம் செடிகளிலிருந்து ரூ. 6,000 மொத்த வருமானம் கிடைக்கலாம். இதில் கிருஷிச் செலவு, எருக் கிரயம், விற்பனைத் தரகு, நிலத்தின் மதிப்புக்கு வட்டி, நிலத்திற்கு உடையவனது உழைப்பிற்குக் கூலி முதலிய அம்சங்களுக்காக மொத்த வருமானத்தில் பாதியை ஒதுக்கி விடுவோமாயின் ஒரு ஏக்கரிலிருந்து சுமார்

210336 ... 0 008

ரூ. 3,000 கிடைக்கும். இவ்வளவு ஏராளமான லாபம் இச்சாகுபடியில் இருக்கையில் ஏன் எல்லோரும் சிவபுரிப் புகையிலை எங்கும் பயிர் செய்யக்கூடாது? அல்லது சிவபுரியில் இப்பயிர் இடுபவர்கள் எல்லோரும் லக்ஷாதிகாரிகளாக இருக்கிறார்களா? கடவுளின் சிருஷ்டி எந்த இடத்திலும் எல்லா வகைகளிலும் பரிபூரணத்வத்துடன் அமையவில்லையென்று நாடெங்கும் திறந்த கண்களுடன் சுற்றிப் பார்த்தவர்களுக்குப் புலனாகும்.

சிவபுரிப் புகையிலையை வேறு பிரதேசங்களில் பயிர் செய்வோமாயின் "வாய்க்குப்போடும் புகையிலை" யினத்துள் அரசு செலுத்தி வருவதற்குக் காரணமாக உள்ள குணத்தை இழந்து விடுகிறது. நீரும், நிலமும் சிவபுரியில் சிவபுரிப் புகையிலைச் சாகுபடிக்கு ஏற்றதாக இருக்கின்றன. சிவபுரி பூமியின் ரஸாயன பாகுபாட்டைப் போலவும் நீரின் பாகுபாட்டைப் போலவும் உள்ள பிரதேசத்தைத் தேடிப் பிடித்து அங்கே சிவபுரியில் புகையிலைச் சாகுபடி எவ்வாறு நடத்தப்படுகிறதோ அதேமாதிரி பயிர் செய்தால் சிவபுரிப் புகையிலையை அதன் குணத்தோடு உற்பத்தி செய்யக்கூடும். சிவபுரியில் ஒருவருக்கும் அதிகமான விஸ்தீரணம் கிடையாது. கால்காணி நிலமிருந்தால் அதிகம். அதிகநிலம் படைத்தவர்களோ டாம்பீகமான விதமாக வாழ்நாட்களை அமைத்துக்கொண்டு விடுவதால் சிவபுரிப் புகையிலை என்ன லாபத்தைத் தந்தும் பொருளாதார விஷயத்தில் விருத்தியாவதில்லை.

காளிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில் கீழுள்ள வாழைக்கு உகந்த ஒரு ஏக்கர் பூமியிலிருந்து ஒரு ஆயிரரூபாய் சம்பாதித்துவிடலாமென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லா, மூங்கில் காடுகளுக்கும், மூங்கில் போத்து அமோகமாகச் செழிப்படைந்து வளரும் மலைகளுக்கும் வெகுதூரத்திற் கப்பால் இருப்பதால், இந்த ஜில்லாவிலுள்ள படுகை நிலங்களில் மூங்கிலை நட்டுக் கிருஷி செய்தால் 15, 20 வருஷங்களில் ஒரு ஏக்கரிலிருந்து முப்பது ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கலாம். தஞ்சாவூர் ஜில்லா ஐயம்பேட்டையில் எலிமிச்சைச் சாகுபடியும் வருஷத்திற்கு ஒரு ஏக்கரிலிருந்து ரூ. 2000க்குக் குறையாமல் பலன் தருகிறது. நெல்லிக்குப் பத்து வெற்றிலைச் சாகுபடியும் ஏக்கர் ஒன்றுக்கு வருஷத்தில் சராசரி ரூ. 2000க் குறையாமல் வருமானமளிக்கிறது. சேலம் ஜில்லாவில் கிணற்றடியில் பயிர் செய்யப்படும் வெங்காயமும், நெல்லும், ஒரு வருஷக் கிருஷியில் ரூபாய் ஆயிரத்திற்குக் குறைந்த பலனை அளிப்பதில்லை. தென்னாற்காடு ஜில்லாவில் கடற்கரை ஓரமாகவுள்ள இடங்களில் "மோரிசு வாழை" என்றழைக்கப்படும் "பச்சை நாடன்" வாழையும் ஒரேவருஷக் கிருஷியில் ஏக்கர் ஒன்றுக்கு ஓராயிர ரூபாய் லாபந் தருகிறது.

தைப் பொங்கலுக்கு முற்றி விடும்படி முன்னாடியே கரும்பு நட்டுச் சாகுபடி செய்து கழி கழியாகச் சங்கராந்தியின் போது விற்

ருல் ஒரு ஏக்கரிலிருந்து ரூ. 2000க் குறையாமல் லாபம் கிடைக்கும். தஞ்சாவூரில் ரோஜாச் சாகுபடியிலும், "குடை மிளகாய்ச்" சாகுபடியிலும், சென்னைக்கு அருகில் காய்கறித் தோட்டங்களிலும் வருஷம் ஒன்றுக்கு ஆயிர ரூபாய் முதல் இரண்டாயிர ரூபாய்வரையில் ஒரு ஏக்கரிலிருந்து வருமானம் கிடைக்கிறது.

நல்ல விலைகொடுத்து வாங்கக் கூடிய சந்தையும் வளமான பூமியும், ஊக்கமுடைய பண்ணையாட்களும், ஜலவசதியும் ஒருங்கே அமைந்திருக்கும் இடமாக இருந்தால், உடனுக்குடன் நல்ல விலைக்கு விலையாகக்கூடிய பயிர்களையிட்டு கால் ஏக்கர் நிலத்திலிருந்து வருஷத்தில் ரூ. 500 சம்பாதித்து விடலாம். பட்டணங்களுக்கு வெகு தூரத்திற் சப்பாலும், உடனுக்குடனே வாங்கிக்கொள்ளத் தகுந்த சந்தை அருகாமையி லில்லாததோடு நீர்வளமும், நிலவளமும் அற்ற பல்லாரிப் பிரதேச பூமிகளைப்போல் இருக்குமாயின் இந்த ரூ. 500 நிகரலாபம் கிடைக்க 35 ஏக்கர் நிலத்தைவைத்துக் கொண்டு விவசாயம் நடத்தித்தான் தீரவேண்டும்.

மலையாளம் தென்கன்னடம் ஜில்லாக்களிலோ மழை மிகவும் அதிகம். ஆண்டுக்கு நூறு சேர் மழைக்குக் குறைந்து பொழியும் பிரதேசம் மேறகுக் கடற்கரை ஓரத்திலில் இல்லை. மழை அதிகமாகப் பெய்தாலும் அதற்கேற்ற நிலவள மில்லை. ஏராளமான மழையும், வடிகால் வசதியும், உப்பங்காற்றும் தேவையான தென்னை அமோகமாக இங்கே செழிப்படைகிறது. இரண்டு ஏக்கர் நிலத்தில் ஒரு நூறு தென்னம்பிள்ளை களை நட்டு வருஷவாரியில் ஐந்நூறு ரூபாய் சம்பாதித்து விடுகிறான் மலையாளத்துக் குடியானவன்.

பூமி சுத்த மணற்காடாக இருந்தால் எவ்வளவு பெரிய பண்ணையாக இருந்தும் பலனில்லை. விவசாயி இடும் உரங்களெல்லாம் பொழியும் மழை நீருடன் கலந்து, வெளியே ஓடி விடும். ஆற்றங்கரை ஓரமாகவுள்ள மணற்காட்டில் அநேக இடங்களில் "சவுக்கு" நடுகிறார்கள். பத்துவருஷம் வரையில் காத்திருந்தால் சகல செலவும் போக ஏக்கர் ஒன்றுக்குப் பத்தாவது வருஷத்தில் ரூ. 500 கிடைக்கும். ஆதலால் இத்தகைய மணற்காடுகளாக இருப்பின் சவுக்கு நட்டு லாபத்தை அடையலாம். ஆனால் வருஷம் ஒன்றுக்குக் சராசரி ரூ. 500 வீதம் சம்பாதிக்க வேண்டுமென்றால் சவுக்கு நடத் தகுந்த நிலம் 10 முதல் 20 ஏக்கர் வரையில் வேண்டும்.

மணிலாக்கொட்டை சாகுபடிசெய்ய அதிக உழைப்புத் தேவையில்லை. சோம்பேறிகள் செய்யும் பயிர் என்று இக்கிருஷியைச் சொன்னாலும் பொருந்தும். இச்சாகுபடியினால் ஒரு கிருஷிகன் அடையும் லாபம் பிரான்ஸ் தேசத்து வியாபாரிகள் நிர்த்தாரணம் செய்யவேண்டி யிருக்கிறது. ஒரு ஏக்கரிலிருந்து புஞ்சைச் சாகுபடியாக இருந்தால் இரண்டுபாரம் மணிலாப்பயறு கிடைக்கும். வாரம் ரூ. 50க்கு விற்றாலும் ஏக்கர் ஒன்றிலிருந்தே நூறு ரூபாய் வரையில்

மொத்த வருமானம் கிடைக்கும். பயிர்ச் செலவுக்காக ரூ. 50 ஒதுக்கிவிடுவோமாயின் ஒரு ஏக்கரிலிருந்து ரூ. 50 நிகர லாபமாகக் கிடைக்கும். ஒரு குடும்பத்திற்குத் தற்காலம் தேவையாக நான் வைத்துக்கொண்டிருக்கும் இந்த ரூ. 500 லாபம் அடைவதற்கு 10 ஏக்கர் மணிலா சாகுபடி செய்யவேண்டும்.

மேற்கூறியவைகளி லிருந்து ஒரு குடும்பத்தைப் போஷிப்பதற்கு எவ்வளவு நிலம் தேவையென்று உடனே பதில் அளிக்க முடியாதென்று புலப்படும். பல அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரே பண்ணையின் பரப்பை நிர்த்தாரணம் செய்யவேண்டும். பொதுவாகக் கூறினால் 2 ஏக்கர் சாதாரண நஞ்சை நிலமும், 6 ஏக்கர் சாதாரண புஞ்சை நிலமும் இரு ஏக்கர் தோட்டக்கால் நிலமும் ஒருவனுக்கு இருந்தால், சர்வகலாசாலைகளில் ஆயுளில் முக்கியமான பாகத்தையும், பெரியோர்கள் தேடிவைத்த பணத்தையும் செலவு செய்த பின்னர்ப்பெறும் பட்டங்களுக் குடையவர்கள் சம்பாதிக்கும் பொருளைக் காட்டிலும் பன்மடங்கு சம்பாதிக்க முடியும்.

ஔவை இதைப்பற்றியே

" ஏரும் இரண்டுளதாய், இல்லத்தில் வித்துளதாய்,
நீ ரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்பில்
என்றும் உழவே இனிது "

என்றார். " ஏரும் இரண்டுளதாய்."
என்ற வாக்கியம் அருத்த புஷ்டியானது. இரண்டு ஏர் மாடுகளும், இரண்டு கலப்பை, நுகத்தடி முதலியவைகளும், இவ்விரண்டு ஏர்கள் உழப் போதுமான நிலமும் இருத்தல் வேண்டு மென்பது இவ்வாக்கியத்தின் கருத்து. இரண்டு ஏக்கர் உழக்கூடிய விஸ்தீரணம் எது? இக்கேள்வியும் சாதாரண கேள்வி யல்ல. பின்னர் இதைப் பற்றி எழுதுவேன். ஒரு ஏர்ப் பயிர் நிலமென்பது பல அம்சங்களைப் பொறுத்திருப்பதால். நஞ்சை, புஞ்சை, தோட்டக்கால் இம் மூன்றுங்கலந்த 5 ஏக்கர் பூமியென்றே தற்போது வைத்துக்கொள்ளலாம். ஔவையின் கருத்துப்படி ஒரு கிருஷிகனுக்கு சுமார் பத்து ஏக்கர் பூமி வேண்டும். இதற்கு வேண்டிய மற்ற உபகரணங்களும் வேண்டும். இவை யெல்லா குணங்களும் நிலங்களுக்குப் பல இடங்களில் அமைந்திருக்கின்றன. சாகுபடிக்குத் தகுந்த நிலங்களும், ஏராளமான லாபத்தைத் தரக்கூடிய நிலங்களும், அதிக கஷ்டமின்றிப் பயிர்செய்யக்கூடிய நிலங்களும் நாட்டின்கண் ஏராளமாக இருக்கின்றன. பழக்கத்திற்கும் வழக்கத்திற்கும் அடிமைகளாக இருக்கும் நமது கண்களுக்கும் புலனாக வில்லை. நமது படித்த இளந் தமிழர்களைப் பூமிதேவி பெருநிதியத்தை வைத்துக்கொண்டு அழைக்கிறாள். அவர்கள் காதில் அவள் கூக்குரல் கேட்க வேண்டும்.

சீரைத் தேடின் ஏரைத் தேடு.

கதைப் பத்தி

காகமும் தவளையும்.

ஒரு சிறு தடாகத்திலுள்ள ஒரு தவளை ஒரு நாள் காலையில் ஜலத்தைவிட்டுக் குதித்துக் கரையில் வந்து வெயில் காய்ந்துகொண் டிருந்தது. அப்போது திடீரென ஒரு காகம் வந்து அத்தவளையைக் கௌவிக்கொண்டு ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையொன்றிற் சென்று உட்கார்ந்தது. தவளை ஆலமரத்தைக்காணவே வெகு சந்தோஷத் துடன் "க்ரே, க்ரே, க்ரே" எனக்கூப்பிடத்தொடங்கிற்று.

காகம்:—"இவ்வளவு உத்ஸாஹத்திற்குக் காரணம் என்ன? உன்னை யான் உண்பது உனக்குக் கொண்டாட்டம் தானோ?"

தவளை:—"கொண்டாட்டமல்ல. நீர் இங்கிருந்து என்னைக் கொன்றுதின்றுவிட்ட பிறகு என்ன பாடு படப்போகிறீரோ என்று நினைக்கும்போது எனக்கு நகைப்புவராமலிருக்கச் சற்றும் நிவர்த்தி யில்லை. இதில் என் மாமனார் வசிக்கிறார். அவர் உம்மைப்பார்க் கிலும் மிகப்பெரியவர், உம்மிலும் எத்தனையோ மடங்கு பலமுள் ளவர். என்னை நீர் கொன்று தின்பீராயின் அவர் உம்மை இலேசாக விட்டுவிடமாட்டார். உமது குடலைப்பிடுங்கி மாலை யிடுவார். சந் தேகம் இல்லை. இதை யறியாமல் இவ்விடத்தில் வந்து உட்கார்ந் தீரே என்றுதான் நான் நகைத்தது."

காகம் இதைக்கேட்டு நடுநடுங்கி தவளையை எடுத்துக்கொண்டு அங்கிருந்து பறந்து ஒரு அரசமரத்தில் சென்றிருந்தது. அரசமரம் எதிர்படவே தவளை முன்னிலும் பதின்மடங்கதிகமாகச் சத்தமிட்டு நகைக்கத் தொடங்கிற்று.

காகம்:—"தவளையே! என்ன காரணம்? ஏன் இப்படி நகைக்கிறாய்?"

தவளை:—"வேறொன்றுமல்ல. பூனைக்குப் பயந்து புலிக் கூட்டில் வந்து ஒளித்ததுபோல் ஆச்சுது உமதுபாடு. இதுதான் என் தகப்பனார்வீடு. இவர் என்மாமனாரைப் பார்க்கிலும் மிகுபலசாலி. எதற்கும் அஞ்சாதவர். உம்மைக்கண்டால் ஒன்றாகத்தூக்கி விழுங்கி ஏப்பமிட்டு விடுவார் தடையேயில்லை."

இத்தனையும் கேட்கவே காகத்தின் நெஞ்சம் கலங்கிவிட்டது "தவளைக்கு உறவினர்கள் எங்கெல்லா மிருக்கிறார்களப்பா! வாய்க் கெட்டியது வயிற்றுக்கெட்டாமல் போய்விடுமோ? யாதோ? தெரியவில்லையே! இனி எவ்விடம் சென்றிருந்து இத்தவளையைக் கொன்று புசிக்கலாம்" என்று யோசனை செய்துகொண்டு நாற்புற மும் பார்த்தபொழுது சிறிது தூரத்துக்கப்பால் ஒரு கிணறு அக்கா கத்தின் கண்களுக்குப் புலப்பட்டது. உடன் தானே அது தவளை

யைத் தன் அலகில் எடுத்துக்கொண்டு அக்கிணற்றைநோக்கிப் பறந்துபோயிற்று. அவ்வாறுசென்று கிணற்றருகில் இருந்தபொழுது தவளை காகத்தைப்பார்த்து "காகமே! இனி நான் இறக்கவேண்டியதுதான். இங்கு எனக்கு உற்றபந்துக்கள் ஒருவருமில்லை. நீர் என்மீது கருணைகொண்டு எனக்கு ஒரு உபகாரம் மட்டும் செய்ய வேண்டும். உமதலகு மிக மொட்டையாக விருக்கிறது. அதைக் கொண்டு கொத்தி என்னை சித்திரவதை செய்துவிடாதேயும், தயவுசெய்து! அதை இந்தக்கல்லில் தீட்டிச்கூர்மைப்படுத்திக்கொண்டு ஒரே கொத்தாய் கொத்திக் கொன்றுவிடும். அப்படிச் செய்தால் உமக்குக் கோடி கோடிப் புண்ணியமுண்டு." என்று பலவாறுகக் கூறிக் காகத்தினிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. காகமும் அதற்கு உடன்பட்டு தவளையைக் கிணற்றின் ஓரத்தில் வைத்து விட்டு அங்கிருந்த கல்லில் தன் அலகை மாறி மாறித் தீட்ட ஆரம்பித்தது. தவளையோ அதற்குள் "தப்பினேம், பிழைத்தோம்" என்று ஒரே குதியாகக் கிணற்றுக்குள் குதித்துவிட்டது. காகம் அலகை கூர்மையாக்கிக் கொண்டு தவளையைப்பார்க்கும்போது அதை அங்கெங்கும் காணவில்லை. பிறகு கிணற்றுக்குள் நோக்க, தவளை அந்த ஜலத்தில் நீந்திக்கொண்டிருந்தது. தவளை காகத்தைக் கண்டு "காகமே! நான் என்னசெய்யட்டும். தவறிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டேன். இனி அங்கு ஏறிவர வேண்டுமானாலும் எனக்கு முடியாது. நீர் என் காலைக் கௌவிக் கௌவி புண்படுத்தி என்னை நொண்டியாக்கி விட்டீர். என் காலமுழுவதும் இனி இந்தக்கிணற்றுக்குள் கிடந்து நான் கழிக்க வேண்டியதாக நேரிட்டிருக்கிறது" என்று சொல்லிவிட்டுத் தலையை ஜலத்தில் இழுத்துக்கொண்டது. காகம் ஏமாந்து திரும்பிப் போயிற்று.

படிப்பினை.

புத்தியுள்ளவன் எந்த ஆபத்திலிருந்தும் தப்பிப் பிழைத்துக் கொள்வான்.

புத்தியில்லாதவன் கையிலுள்ளதையும் இழந்துவிட்டு ஏமாந்து நிற்பான்.

S. D. P.

மு ர சொ லி

திருவிதாங்கூர் ஸமஸ்தானத்தில் பிரசித்திபெற்ற விஷ்ணு ஸ்தலமாகிய திருவட்டாற்றுக்கு ஸமீபமுள்ள திருப்பரப்பு என்னும் கிராமத்தில் 500 ஹிந்துக்கள் ஒரே அடியாய் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவர்கள் ஆய்விட்டதாகத் தெரியவருகிறது. இந்த ஸம்பவத்துக்கப்பால் திருவிதாங்கூர் ஹிந்துக்களுக் கிடையில் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டிருப்பதாகவும் திருவிதாங்கூர்ப் பத்திரிகைகள் வாயிலாய் அறிகின்றோம். ஆரியஸமாஜப் பிரசாரகரான ரிஷிராம் அவர்களது நன்முயற்சியால் திருவனந்தபுரத்தில் ஸ்தாபனம் பெற்ற ஆரிய ஸமாஜத்தாரின் சிரமத்தின் பயனாக, சில கிறிஸ்தவர்கள் ஹிந்துக்களான தாகவும் பத்திரிகைகளில் படித்தோம். ஆனால் அவ்வாறு ஹிந்துக்களான கிறிஸ்தவர்கள் தொகை பத்திருபதுக்கு மேற்பட்டிருக்குமோ என்பது சந்தேகமே. இவ்வாறு திருவிதாங்கூர் ஹிந்து சமுதாயம் அடைந்த சொற்ப லாபத்துக்கு எதிராக 500 ஹிந்துக்களை ஒரே அடியாக இழக்கநேர்ந்தது ஹிந்துக்களுக் கெல்லாம் பொதுவாக மன வருத்தத்தை அளிக்கலாம். ஆனால் ஹிந்து ஸமுதாயத்தின் தற்கால இழி நிலைமையில், ஹிந்துக்களெல்லாம் கிறிஸ்தவர்களாகவோ மகமதியர்களாகவோ இதுவரை ஆகாமலிருப்பதே எமக்குப் பெருத்த ஆச்சரியத்தை விளைவிக்கின்றது.

***

மேலே கூறியவாறு கிறிஸ்தவர்களான 500 பேரும் ஹிந்து நாடார்களாம். இவர்கள் கிறிஸ்தவர்கள் ஆன விஷயத்தைப் பற்றித் திருவனந்தபுரம் பொது நலம் பத்திரிகையில் நிருபம் எழுதிய ஒருவர் மிக மனம்நொந்து வாடுகின்றார். இவ்வாறு வாடும் சமய ஊழியன் என்னும் பெயர்புனைந்த அவரும் ஒரு ஹிந்துவென்றே நினைக்கின்றோம். ஒரு ஹிந்து கிறிஸ்தவனாகும் காலத்தில் ஹிந்துக்கள் கூட்டம் கூடுவதும் பத்திரிகைகளுக்கு எழுதுவதும் ஹிந்து மதப் பாதுகாப்புக்காக முயற்சிகள்செய்ய எண்ணுவதும் ஸர்வ சாதாரணமான விஷயம். ஆனால் கிறிஸ்தவர்கள் ஆன ஹிந்துக்கள் ஹிந்துக்களாயிருக்கும் காலத்தில் ஹிந்து ஆலயங்களில் பிரவேசிக்கவோ உயர்ந்த ஜாதியாரைத் தீண்டவோ செய்தால், ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களான சமாசாரம் கேட்டு வருத்தமடையும் அவர்களே, ஹீனஜாதி ஹிந்துக்களுக்குத் துன்பம் விளைக்கத் துணிவு கொள்வர்.

***

காஞ்சீபுரம் தாலூகா தென்னேரியில் நாளது மாசிமீ 3உ அன்று காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமானின் தேப்போற்சவம் நடைபெற்றதாம். அப்பொழுது தென்னேரியின் பக்கத்துக் கிரா

மத்திலுள்ள ஒரு ஆதிதிராவிட பஜனைக் கோஷ்டியார், ஒரு ஒதுக் கிடத்தில் நின்று, திருப்பாடல்கள் பாடி, பகவானை வழிபட வந்தார் களாம். உடனே ஹிந்துக்களில் சிலர் கோபாவேசம் கொண்டு கொதித்தெழுந்து சாடி, அப்பஜனைக் கோஷ்டியாரை நையப் புடைத்து, அவர்களது மத்தளம் தம்பூர் முதலிய இசைக்கருவிகளை யும் பறித்துக்கொண்டு போய்விட்டார்களாம். இவ்விஷயம் இப் பொழுது போலீசார் விசாரணையில் இருக்கிறதாம்.

***

இதுபோன்ற சம்பவங்கள் நமது நாட்டில் பிரதினமும் நடை பெறுகின்றன. ஆகவே ஏழைமக்கள் கிறிஸ்தவர்கள் ஆவது அதிச யமா. ஹிந்துக்கள் எனப்பெயர் வஹித்தவர்களுக்கு ஹிந்து ஆல யங்களில் பிரவேச மில்லாதிருக்கும் வரை இத்தகைய மத மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

***

ஜாதியேற்பாடு இந்தியாவின் முன்னேற்றத்துக்குப் பெரும் தடையா யிருப்பதால் அதனை அடியோடே களையவேண்டுமென்று அநேகர் பிரசங்க மேடைகளில் கூறுவதை நாம் காதாரக் கேட்டிருக் கிறோம். சமீபத்தில் ஆலுவாயில் நடைபெற்ற ஸர்வ ஸமய மகாநாட் டில் தலைமை வஹித்த ஸர். டி. சதாசிவய்யரவர்களும் ஜாதி யேற் பாடு ஹிந்துமதக் கோட்பாட்டுக்கும் வேத நெறிக்கும் எதிரிடை யானதென்று கூறினார்கள். ஜாதி யேற்பாடு பிற்காலத்தில் உண் டான தென்றும் அவ்வேற்பாடு எடுபட்டால் மட்டுமே இந்தியா முன்னேற்ற மடையுமென்றும் சென்ற மூன்று நான்கு நூற்றாண்டு களாகப் பல அறிவாளிகள் தக்க ஆதாரங்களுடன் விளக்கி யிருக்கி றார்கள். எனினும் என்ன! நாம் முன்னிருந்தபடியே இருக்கின் றோம். நமது மாமூல் பைத்தியம் ஒழியவேண்டும். நாம் மனமார உண்மையென்று உணர்ந்த விஷயங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர மனத் துணிவு பெறவேண்டும். ஆயின் நாம் கடைத் தேறுவோம். தேசமும் ஒற்றுமை அடையும். நமது அடிமைத் தனமும் ஒழியும்.

***

காந்தி மாத ஆரம்ப தினத்தன்று சென்னைக் கடற்கரையில் ஒரு மகாநாடு கூடிற்று. ஆந்திர ரத்னம் கோபாலகிருஷ்ணய்யா அவர்கள் அக்கிராசனம் வஹித்தார்கள். அவர்கள் தம் முடிவுரைப் பிரசங் கத்தில், தீண்டாமைப் பிரச்னையைப்பற்றிப் பேசியபொழுது, "பஞ்சமர்களுக்கு நமது இல்லங்களில் பிரவேச மளிக்கவேண்டும். அவர்களுடன் ஸமமாக பந்தியோஜனம் செய்யவேண்டும். பஞ்சமர் களுக்கு நம்முடன் சேர்ந்துகொள்ள விருப்பமே காணவில்லை. பாதிரி மாரிடம் அவர்களுக்கு அதிகமான பற்று இருந்தே வருகிறது. தீண்டுதல், பொதுக்கிணறுகளில் நீரெடுக்க ஸம்மதித்தல் முதலிய

சில்லறைத் தாக்ஷண்யங்களால் அவர்கள் குறைபாடு நீங்கிவிடாது'' என்னும் பொருள்படக் கூறினார்கள். நம்மவர்கள் இம்மொழிகளைச் செவிக்கொண்டு நடக்கத் துணிவு கொள்வார்களாயின் மதமாற்றக் கலவரங்கள் உண்டாகவே மாட்டா.

***

கூர்ஜர நாட்டிலிருந்து பத்துலட்சம் ரூபா வசூல்செய்து மஹாத்மா காந்திக்கு அளிக்கவேண்டுமென்று ஸ்ரீமாந் வல்லவை படேல் முயற்சிசெய்து வரும் விவரம் நமது நேயர்கள் அறிந்திருக்கலாம். ஆனால் அந்தத் தொகை முழுதும் பம்பாய் வாசியான ஒரு பாத்தியாக் கோடீசுவரர் சென்ற பெப்ருவரிமீ 19உ அன்று கொடுத்து விட்டாராம்.

இக்கோடீசுவரரின் வள்ளன்மையை நாம் பெரிதும் போற்றுகின்றோம்.

***

சென்னைச் சட்டசபையின் போக்கைக் கவனிக்கும்பொழுது பள்ளிப்பையன்களின் பணிகாரச்சண்டை ஞாபகத்துக்கு வருகின்றது. மற்ற மாகாணச் சட்டசபைகளிலும் கட்சி பேதங்கள் இருக்கின்றன வென்பது உண்மையே. ஆனால் பிறர் நகைப்பதற்குரிய விதமாக மற்ற மாகாணச் சட்டசபை அங்கத்தினர் நடந்துகொள்ளவில்லை. சென்னையில ஒற்றுமை ஏற்படுவது எக்காலம்? ஒன்றிரண்டு அங்கத்தினர் வீரத்தனத்துக்கும் வீணத்தனத்துக்கும் வித்தியாசம் தெரியாதவர்போல் ஒழுகுகின்றனர். இவர்கள் தானே சிலசமயங்களில் சட்டசபை ஒழுங்குகளுக்கும் மரியாதைகளுக்கும் தாமே இருப்பிடமெனப்பொருள்படு மாறும் வாய்ப்பறை கொட்டுகின்றனர். சாமானிய ஜனங்கள் இந்தச் சுத்தவீரர்கள் போக்கின் உண்மை நிலையை எளிதில் அறிந்து வருகின்றனர்.

***

இம்மாத (மார்ச்சு) ஆரம்பத்தில் டெல்ஹியில் கூடிய இந்தியச் சட்டசபையில் 1924-ஆவது வருஷத்திய வரவு செலவுத் திட்டம் ஹாஜர்ப் படுத்தப்பட்டது.

அதன்படி 1924-ஆவது வருஷத்திய.

வரவு	107·93 கோடி ரூபா
செலவு	104·57 கோடி ரூபா
மீதம்	3·36 கோடி ரூபா

இந்த மீதம் 3 கோடி 36 லட்சம் ரூபாவையும் உப்புவரியைக் குறைக்கவும் மாகாணக் கப்பங்களைக் குறைக்கவும் வழங்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. உப்புவரி 2. ரூபாவாகக் குறைவு செய்யப் படுமாம். மாகாணக் கப்பம் குறைவு செய்யப்படும் இனத்

தில் சென்னை மாகாணத்தின் பங்குக்கு 80 லட்சம் குறைவாகு மென்றும் மதிப்பிடப் பட்டிருக்கிறது.

***

'நாஷணலிஸ்டு' கக்ஷியார் தங்கள் முட்டுக்கட்டை முயற்சியில் வெற்றி யடைந்து வருகின்றனர். துரைத்தனத்தாரும் பிடிவாத முடையவர்க ளாகவே காணப்படுகிறார்கள். ஆகவே ஹாஜர்ப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டப் படியே யாவையும் நடை பெறு மென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது. சுமார் 108 கோடி ரூபா வருமான முள்ள நமது தாய் நாட்டுக்கு இராணுவச் செலவு மட்டும் 60 கோடி ரூபாவாம். இச்செலவில் ஒரு பைசா கூட குறைக்க முடியா தென்று தலைமைத் தளகர்த்தர் அறுதியிட்டுக் கூறிவிட்டனர். தோட்டத்தில் பாதி கிணறு என்பார்கள். இந்தியவருமானத் தோட்டத்திலோ பாதிக்குமேலும் இராணுவச் செலவுக் கிணறாகவே இருக்கின்றது.

ஹாஸ்யத் துணுக்குகள்

தகப்பனர் :—அடே! கோபாலா! நீ வகுப்பில் சோம்பேறியா யிருக்கிறாயாம். உன் உபாத்தியாயர் என்னைக் காணும் பொழுதெல்லாம் குறை கூறுகிறார். ஜார்ஜ் வாஷிங் உன் வயதில் அவர் வகுப்புப் பையன்களுக்கெல்லாம் தலைவராக இருந்தார் தெரியுமா?

மகன் :—"ஆம் அப்பா! தெரியும். தங்கள் வயதில் அவர் ஐக்கிய நாட்டுக்குத் தலைவராகவு மிருந்தார்."

வெயிலில் வேலை செய்யும் கூலிக்காரனைப் பார்த்து "அடே! வெயிலில் மொட்டைத் தலையோடு வேலை செய்கிறாயே! மூளை உருகிப் போகாதா?"

கூலிக்காரன்.—ஐயா! என் தலையில் மூளை யிருந்தால் இந்த வேலைக்கு வருவேனா."

மகன் :—"அப்பா! கோபம் சண்டாளம் அல்லவா?"

தகப்பன் :—"ஆம் மகனே! தடை யென்ன?"

மகன் :—அப்பா! தங்கள் மூக்குக்கண்ணாடியை நான் உடைத்து விட்டேன். கோபிக்கக் கூடாது."

விசேஷக் குறிப்புகள்

70 வருஷம் சர்க்கார் வேலை.

84 வயதுள்ள உல்லியம் பிரர்ட்டன் என்பவர் 70 வருஷம் சர்க்காருக்கே உழைத்தற்காக "ஆர்டர் ஆப் பிரிட்டிஷ் எம்பயர்", என்ற மெடல் கொடுக்கப் பெற்ருர்.

***

நகை களவு.

ஹாரோகேட் என்ற ஊரில் மோட்டார் சைகிளில் ஏறிக் கொண்டு ஒருவன் மெஸர்ஸ் எட்வர்ட்ஸின் நகைக் கடைக்குப்போய் ஜன்னலை உடைத்து 1500 பவுன் விலை யேறப்பெற்ற மோதிரங்களேயும், நகைகளேயும் திருடிவிட்டான்.

***

3 அடி உயரமுள்ள கைதி.

கிளாஸ்கோ என்ற பட்டணத்தில் 4 சிறுவர்கள் 4000 பவுன் திருடிவிட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கோர்ட்டுக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்களில் ஒருவன் உயரம், கைதிகள் நிற்கும் பெட்டியைச் சுற்றிப் போட்டிருக்கும் கம்பிகளின் உயரங்கூட இல்லையாம். கம்பிகளின் உயரம் $3\frac{1}{2}$ அடி.

***

களவு போன கோப்பை பிரார்த்தனையின் பின் கிடைத்தது.

ஆங்கில நாட்டிலுள்ள டி. பிவார்ஸ் குயரிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ் ஆலயத்திலுள்ள கோப்பையானது களவு போய்விட்டது. பின்பாதிரி இவான்சும் மற்றவரும் கோப்பை திரும்பவும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தார்களாம். பாதிரியார் ஆலயத்தைச் சுற்றிவரும்போது ஒரு கூடிதத்தில் பத்திரமாய்ச் சுற்றப்பட்டு ஒரு மூலையில் தென்பட்டதாம்.

***

விழுப்புரம் திருச்சி ரயில்பாதை.

விழுப்புரத்துக்கும் திருச்சினுப்பள்ளிக்கு மிடையே சாதாரண ரயில்பாதை (3 அடி $3\frac{1}{4}$ அங்குலம் பாதை) போடுவதற்கு இந்தியா மந்திரி அனுமதி கொடுத்து விட்டாரென்று டில்லியிலிருந்து தந்தி வந்திருக்கின்றது.

***

படக்காட்சிக்குச் செல்பவர்.

அமெரிக்காவில் தினந்தோறும் 10-கோடி முதல் 20-கோடி வரையில் மனிதர்கள் படக்காட்சிக்குக் செல்வதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

விசேஷக் குறிப்புகள்

ஒரு பார்ஸிக்காரரின் பரோபகாரம்.

சில தினங்கள் முன் இறந்துபோன ஹார்மஸ்ஜி வாடியா என்ற பார்ஸி வியாபாரி எழைப் பார்ஸிகளின் உதவிக்காக 10 லட்சம் ரூபாய் தர்மத்துக்கு விட்டு வைத்துப் போயிருக்கிறார்.

கிரேட் பிரிடனிலிருந்து உலகிலுள்ள முக்கிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகி யிருக்கும் சரக்குகளின் மதிப்பு பின் வருமாறு :—

	1921	1922
	பவுன்	பவுன்
இந்தியா	11,14,03,846	9,29,39,000
அமெரிக்க ஐக்கியநாடுகள்	6,43,08,334	7,36,76,000
பிரான்சு	5,70,65,016	6,59,38,000
ஆஸ்திரேலியா	4,82,90,990	6,57,32,000
ஜெர்மனி	4,07,11,213	4,90,62,000

***

பேசும் காட்சிப் படங்கள்.

ஜர்மனியின் தலைநகரான பர்லினில் பேசும் படக்காட்சிப் படங்கள் தயார்செய்யப்பட்டு வருகின்றனவாம்.

***

மனிதரைப் புசிக்கும் மானிட வர்க்கத்தார்.

கொலம்பியா தேசத்தில் அநாகரீக ஜாதியார் ஒரு வகுப்பார் இன்றைக்கும் வசித்து வருகிறார்கள். இவர்கள் நரமாமிஸ பட்சணிகளா யிருக்கிறார்கள். இவர்கள் மனுஷரின் மாமிசத்தைச் சாப்பிடக்காரணம், தாங்கள் சாப்பிட்ட பேர்களின் புண்ணிய பலன்களெல்லாம் தங்களைச் சேருமென்ற புத்திக்குறைவான எண்ணமே. அவர்கள் மற்றவர்களின் தலையையும், கால் கைகளையுமே புசிக்கிறார்களாம். தலையானது அறிவிற்கும் புண்ணியத்திற்கும் இருப்பிடமானதாலும் கைகால்களில் பலமிருப்பதால் அவைகளையும் சாப்பிடுகிறார்களாம். ஆனால் அவர்களில் பெண்கள் மாத்திரம் நரமாமிஸம் பக்ஷணம் செய்வதற்கு ஆடவர்களால் அனுமதி கொடுக்கப்படுவதில்லையாம்.

***

சமுத்திரத்தின் ஆழம்.

சமுத்திரங்கள் சரா சரி 2 மைல் முதல் 3 மைல் வரையில் ஆழமிருக்கின்றனவாம். தென் ஆப்பிரிக்காவில் ரையோடி லாய்ளாட்டா நதியின்முகத்துவாரத்தின் பக்கத்தில் அட்லாண்டிக் ஸமுத்திரத்தின் ஆழம் 45,000 அடியாம். சில விடங்களில் 8 மைலுக்குமேல் ஆழமாக விருக்கிறதாம்.

புதிய தபால் விதி.

இந்திய தபால் விதிகளுக்கு கீழ் கண்ட விதிகளும் புதிதாகச் சேர்க்கப் பட்டிருக்கிற தென்பதை கடிதம் எழுதுபவர்கள் கவனிக்கத் தக்கது.

"முழுப் பெயர் இல்லாமல், குறிப்பான எழுத்துக்கள் மட்டும் உள்ள விலாசமுள்ள கடிதங்களாவது, பென்சிலில் விலாச மெழுதப் பட்ட கடிதங்களாவது, தபாலில் போடும் சமயத்தில் விலாசங்கள் கலைக்கப்பட்டும், அல்லது, திருத்தப்பட்டும் உள்ள கடிதங்களாவது விலாசதார்களுக்கு அனுப்பப்பட மாட்டா."

இவ்வித விதிகள் எல்லாக் கடிதங்கள் சம்பந்தமாகவும், எல்லா சந்தர்ப்பங்களிலும் அனுசரிக்கப் பட வேண்டுமானால், இதன் பொருட்டு ஏராளமான பௌவுண்டன் பேனுக்கள் விற்பனையாவதற்கு இடமுண்டாகு மென்று "இங்கிலீஷ்மான்" பத்திரிகை கூறுகிறது.

***

தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த இளங் கன்னிகைகள்.

ரோமாபுரியிலுள்ள ஒரு கண்ணாடித்தொழிற் சாலையில் வேலை செய்துகொண்டிருந்த, 15-வயது முதல் 20-வயது வரையுமுள்ள நான்கு பெண்கள் அடிக்கடி 'பயஸ்கோப்' போய்ப் பார்த்து வந்தனர். அங்கு காட்டப்பட்ட பெண்கள் விலையுயர்ந்த ஆபரணங்களையும் பாரீஸ் நவீன நாகரீக ஆடைகளையும் அணிந்து, மோட்டர் முதலிய வண்டிகளிலேறி, வேறு பல ஆடம்பரங்களை யனுபவித்து, மிகவும் உல்லாசமாக இருப்பதை இந்த நான்கு கன்னிகைகளுங் கண்டனர்; கண்டு அவ்வித சுகவாழ்வு தமக்கும் இருந்தாலன்றி இவ்வுலகத்தில் உயிரோடிருப்பதில் பயனில்லையென்று தீர்மானஞ்செய்து, நால்வரும் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்து 'டிஞ்சர் ஆப் அயோடின்' என்ற மருந்தடங்கிய ஒரு சிறிய புட்டியை யெடுத்துக்கொண்டு, யாருமில்லாத ஓர் மறைவான இடத்திற்குப்போய் அவ் விஷமருந்தை யருந்தி மரணத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் 3 மணி நேரமாகியும் பாவி எமன் வந்தானில்லை. ஏனெனின், விஷமருந்து உயிரைப் போக்கக்கூடிய வளவு போதுமானதாயில்லை. மிகவும் கொஞ்சமாயிருந்தது. கடைசியாக அவர்களுடைய மனோரதத்தைக் கொலைபுரிய போலீஸ் யமன்கள் தான் வந்தனர். வந்து, தில்டா, ஆடா, எலினு, அட்ரியானு என்ற இந்த நான்கு பெண்களையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று தாய் தந்தையர்களை வரவழைத்து அவர்கள் வசம் ஒப்புவித்து விட்டனர்.

Cool Breezes at 1/3 of an Anna an hour.

"Ky-Ko" Kerosene Oil Fan.



Fan 20" Diameter

NO { ELECTRICITY
STEAM
CLOCKWORK
GLASS

Dispenses entirely with the need for a Mosquito Net.

Made in London from British Materials of the best quality and finish. The Fan runs at a high speed for sixteen consecutive hours without attention. Motive Power Kerosene. Kerosene consumption one pint in 9 hours.

Price Rs. 140 each.

BHAYA HANUMAT PRASAD SINGH, M.L.C., Rais and Zamindar, Athadama (Bastri), says in his letter dated 24th Sept., 1922 :— "The Fan is working to my entire satisfaction. I have been using it since July last and have found it very useful. It is light, strong and portable."

Eastern Electric & Trading Co.

175, Hornby Road, Fort,

: **P. O. Box No. 459 : BOMBAY.** :

Telegrams: "EASLEKTRIK." Telephone No. 24963.

Also at :—

KARACHI - LAHORE - AMRITSAR.

பி. வி. ராஜன் "பட்டணம் பொடி"

எக்ஸிபிஷன்களில் ஸர்ட்டிபிகேட்டும் அநேக பிரசித்தி பெற்ற டாக்டர்களால் ஸர்டிபிகேட்டும் பெற்றவை.

உயர்ந்த புகையிலையினுல் குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயும் நீண்ட நாள் கெடாமலிருக்கும்படியும் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டு வெகு நாட்களாக மார்க்கட்டில் நல்ல பெயர் பெற்றுவருகிறது. வெளியூர்களுக்கு விலை சரசமாய் சப்ளை செய்து வருகிறோம். ஒரு தடவை எங்களிடம் தருவித்துப் பார்த்தால் அதன் உண்மை தெரிய வரும். வீசை 1-க்கு டின் உள்பட விலை ரூ. 3-10-0. தபால் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம். ஒரு சேர், அரை சேர் டின்களாகவும் அனுப்பப்படும்.

R. S. சுகந்த மூக்குத்தூள்.—இது நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது. இதை உபயோகிப்பதனுல் ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத் தலைநோய், மண்டைக்குத்தல், கண்ணி லேற்படும் எல்லா வியாதிகளையும், மூளையைச் சேர்ந்த சகல வியாதிகளையும் போக்கி குணப்படுத்தும். புட்டி 1-க்கு விலை ரூ0-4-0 } ஒரு சேர் டின்
டஜன் 1-க்கு „ ரூ2-4-0 } 1-க்கு ரூ 1-12-0

தபாற் செலவு அல்லது ரெயில் சார்ஜு பிரத்தியேகம்.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இல்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணு 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணுசல முதலி வீதி,
சவுகார்பேட்டை, மதராஸ்.

சு க சா த ன ம்

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்

உங்களுக்கு அவசியம் தேவையானது உடனே எழுதுங்கள்.

வைத்திய அனுபதங்கள், வாழ்க்கை மர்மங்கள், ரகசியக் குறிப்புகள், விவாகமானேர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்கள் சம்மந்தமான பலவகை விவரங்கள், இல்லற சார சங்கிகம் ஆகிய பலவும் அடங்கிய ரகஸ்ய ரத்னம் உங்களுக்கு அவசியம் தேவையான புஸ்தகம். விலை யில்லை, தபாற் செலவில்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ., டிப்போ, 165, பிராட்வே,
தபாற் பெட்டி 222, மதராஸ்

இது ஒரு அதிசயமல்லவா?

உண்மையில் இது ஒரு அதிசயம்தான். ஏனெனில் எல்லாக் கடியாரங்களுக்கு ஓடுவதற்கு சாவி கொடுத்தால், இதற்கு கொடுக்க வேண்டியது அவசியமில்லை. ஒரு பெரியகடியாரம் சுவரில் மாட்டும்பொழுது சரிமட்டம் பார்த்து வைக்கவேண்டியதாக இருக்கிறது, இதற்கு அது தேவையில்லை. எந்த சுவரில் மாட்டின போதிலும் மணி மிக ரம்மியமாகக் காட்டும். ஒரு நாளும் மணி அதிகமாகவும் கம்மியர்கவும் போகமாட்டாது. ஆகையால் இது ஒரு அதிசயமாகும். புதியதாக ஜெர்மணி தேசத்தில் இருந்து வரவழைக்கப் பட்டு இருக்கிறது. இந்த கடியாரம் ஓடவேண்டும் என்று விருப்பம் இருந்தால் கடியாரத்தின் கீழ்ப்பாகத்தில் இருக்கும் ஒரு குண்டை மேல் பாகத்திற்குத் தள்ள வேண்டும். மறுநாளும் இப்படியே செய்யவேண்டும். பார்வைக்கு மிக்க அழகாயிருக்கும். உடனே ஒன்றை வரவழைத்து பாருங்கள். கடியாரம் 1-க்கு விலை ரூ. 3 0 0.

வி. எ. எஸ். பாணி அண்டு கம்பெனி,

தபால்பெட்டி, நெ. 17, மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு

பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட் டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	ப.
ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை	15	0	0
சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு	2	4	0

இன்னும் இதர தமிழ்ப் புஸ்தகங்களும் கிடைக்கும்.

காந்தன் & ராஜன்,

புஸ்தக வியாபாரிகள்,

மைலாப்பூர், சென்னை.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
வெஸ்ட் அண்டு கோ,
மவுண்ட் ரோட்,
சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா ஒன்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷ்தசாலை, எழும்பூர், மதராஸ்.

எலக்டிரிக் கைவிளக்கு

2'' லென்
ஸுடனும்
பாடரி,
பல்பு
உள்பட

விலை
ரூ. **4-8.**

No. 34.

எலக்டிரிக் பாகெட் விளக்கு

$1\frac{1}{4}$'' லென்
ஸுடனும்
பாடரி
பல்பு
உள்பட

விலை ரூ. **2**

No. 33.

தனி பாடரி அணா **12.** தனி பல்பு அணா **6.**

சிகார் லயிட்டர்

நிக்கில் பா
லிஷ் கொ
டுத்தது.

விலை
அணா **12.**

தனி பிளி
ண்ட்.

அணா **1.**

C. 2.



C. 9.

ஆடோமாடிக் சிகார் லயிட்டர்

.W. மேகர் நிக்கில்பாலிஷ் கொடுத்தது
விலை ரூ. **1-8.**
தனி பிளின்று அணா **1.**

☞ மொத்த வியாபாரிகளுக்கு பிரத்தியேகமான விலை கொடுக்கப்படும். கியாட்லாக்குக்கு எழுதவும்.

C. KRISHNASWAMY NAIDU,

2-105, Armenian Street,

MADRAS.

ஜீ. பாம்பே குஷ்டாம்ருதம்.

மூந்துங்கள்! மூந்துங்கள்!! மூந்துங்கள்!!!

சொற்ப மருந்தே கையிருப்பு.

இந்த குஷ்டாம்ருத சஞ்சீவியை வியாதியின் வன்மைக் கேற்றவாறு ஒரு மண்டலம் அரை மண்டலம் அல்லது 16 நாள் உட்கொண்டு வந்தால் 18 வித குஷ்டரோகங்களும் 21 விதமான மேக ரோகங்களும் மேக சம்மந்தத்தால் வரும் பவித்திரம், கிரந்திகள் ஆருத பெருத்த விரணம் குழிப்புண்கள் இரத்தக்கெடுதியால் வரும் சர்மவியாதிகளும் லிங்கப்புற்று கண்டமாலை முதலிய கொடிய ரோகங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி திரேகத்தை வயிரம் போல் செய்யுமென்பதற்கு இதற்கு குறிப்பிட்டு இருக்கும் விலையே அதில் விசேஷ குண முடைய சஞ்சீவிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு போதுமான அத்தாக்ஷி. இது ஒப்புயர்வில்லாத சஞ்சீவி. இதை கண்ணுற்றும் விட்டு விடுவது வினைப் பயனாகும், அவுஷதம் உட்கொள்ளும் விபரமும் அனுமானமும் மருந்துடன் அனுப்பப்படும்.

16 நாள் மருந்து புட்டி 1க்கு ரூ. **11-4-0.**

தபால் செலவு பிரத்தியேகம்.

ஆயுர் வேத பண்டிட், **ஜீ. பாம்பே அண்டு கோ.,**

சாமிநாய்க்கன் வீதி, சிந்தாதிரிபேட்டை, சென்னை.

ஓர் உயர்தர தமிழ் ஸஞ்சிகை.

“கிராம வாழ்க்கை”

மாதம் இருமுறை வெளியாகிறது. வருட சந்தா ரூ. 4.

சென்னை ராஜதானி கிராமவாசிகள் உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், கிராமங்களின் முன்னேற்றத்தையும் கருதி இப்பத்திரிகை பிரசுரமாகிறது.

கௌரவ பத்திராதிபர் :—

ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார்,

M.L.C. *Bar-at-Law.*

சென்னை இராஜதானி முழுவது முள்ள கிராமங்களில் இப்பத்திரிகை விசேஷமாகப் படிக்கப்பட்டு வருவதினால் வியாபாரிகளின் விளம்பரங்களுக்கு இதுவே நிகரற்ற கருவியாகும்.

மாதிரிப் பிரதி இனும்.

மானேஜர்—“கிராமவாழ்க்கை”

331, மிண்ட் தெருவு, மதராஸ்,

அகஸ்தியர்
பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் ஏற்படுதல், தலையில் ஏற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் ஏற்படும் சகலவித மான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்

பாரிஸ் லேடிகளின் படுக்கை அறையின்
அழகிய லீலா விநோத போட்டோ படங்கள்.

இது பார்ப்பவர்களுடைய மனதை பிரமிக்கச்செய்து

இருதரத்தாருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும்; இதில் ஆண் பெண்களின் விநோதமான போட்டோ படங்கள் பலவித நிறங்களோடு வெகு அழகாயிருக்கின்றன. இந்த போட்டோக்களை படுக்கை அறை (Bed Room) யில் வைத்தால் வெகு சுந்தரமாயிருக்கும். ஒவ்வொரு போட்டோக்களின் ரகஸ்யத்தை இதில் எழுத முடியாதென்று சுருக்கிவிட்டோம்.

நெ. 1. 12 ரகம் செட்டு 1-க்கு ரூ. 3. நெ. 2. அஸியிம் போட்டோ படங்கள் 12 ரகம் செட்டு 1-க்கு ரூபாய் 2-8-0.

எமது விலாசம் :—

லில்லி அண்டு கோ.,

நெ. 4, கிருஷ்ணப்ப நாய்க்கன் கொளத்துத் தெரு,
சென்னை.

ஜெர்மன் சில்வர் டமிளர்



மூடியுள்ளது. மூடியைத் தனியாய் கழற்றக் கூடியது. உயரம் 7 இஞ்சு. விலை 1-க்கு ரு. 2.

ஜெர்மன் சில்வர் பொம்மைகள்

யானை, குதிரை, மான், சிங்கம் முதலிய மிருகங்கள்.

2½, 3 இஞ்சி உயரம்.

விலை 1-க்கு ரு. 1-4-0.

ஒரு செட் 6 பொம்மைகளுக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு விலை ரு. 6-8-0.

அன்னபூர்ண சில்க் ஸ்டோர்ஸ்,

தசாசுமேத ரோட், காசி.

ஜெர்மன் வைர மோதிரங்கள்

இம் மோதிரங்கள் ஜெர்மன் சாஸ்திரவாதிகளால் மின்சார சக்தியாலும் சிற்சில உலோகங்களாலும் சேர்த்து செய்யப்பட்ட அசல் வைரக்கல்லுகளையும் தோற்கடிக்கும் ஏழுகமலங்களுடனும் ஒருநாளும் கறுக்காத ஜெர்மன் பொன் கட்டு வேலைப்பாடுடன் வரவழைக்கப் பட்டிருக்கின்றன. ரூ. 300 மதிப்புள்ள மோதிரம் 1-க்கு விலை ரூ. 1—8—0 3. மோதிரங்களுக்கு விலை ரூ. 4—0—0 தபால் கூலி அணா 5.



ஆலிவர் அண்டு கம்பெனி, 22-வது டீட், மதராஸ்.

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணுமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணாடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதறாஸ்.

RING WORM

சர்வபடை சங்காரி.

இது எவ்வளவு நாள் பட்டதாகிலுமுள்ள படை, சொறி, சிரங்கு இவைகளை 24 மணி நேரத்தில் குணப்படுத்தும். உத்திரவாதம்.

விலை புட்டி 1-க்கு அணா 10.

தபால் சிலவு வேறு.

ரோம சங்காரி.

இதை உபயோகித்த 5 நிமிஷங்களுக்கெல்லாம் சரீரத்தின் எந்தபாகத்திலுள்ள மயிரானாலும் சரி உடனே நீங்கிவிடும். யாதொருவித தொந்தரவும் உண்டாகாது.

விலை பாக்கெட் 1-க்கு ரூபா 1.

துருவா அண்டு கம்பெனி

மதருஸ்.

ரப்பர் ஸ்டாம்பு செட்டுடன் ரூபா 2.



பித்தளை அரக்கு சீல் ரூபா 1.

ரப்பர் முத்திரை அரக்கு சீல், பிளாக்குகள்

செய்ய தகுதியான இடம்

டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,

232, கோவிந்தப்ப நாயகன் வீதி, மதராஸ்.

கேட்லாக்கு எழுதி கேழ்க்கவும்.

புத்திர சந்தான எண்ணெய்

ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து வருவதினாலும் மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரிபற்றி இரத்தம் கட்டியிருந்தாலும் மூலச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் ஆறுவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருதரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவது முண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ.2.

விலாசம் :— கேட்லாக் இனாம்.

என். வி. கோபால் அண்டு கோ.,
27, வெங்கடேசமேஸ்திரி தெரு,
கிருஷ்ணாங்குளம், மதராஸ்.

ஓர் ஆச்சரியம் ! ஓர் விநோதம் ! !

பாகெட் டிடக்டிவ் என்னும்

(துப்பு அறியும் இரகசியக் கருவி)

இருபதாம் நூற்றாண்டின் கலியுக நூதன அதிசயம்.



இந்தக் கருவியின் மூலமாக ஒருவர் பிற்காலத்தில் நிகழக் கூடிய விஷயங்களையும், காதலிகள் அந்தரங்கத்தில் செய்யும் காரியங்களையும், அதிக ஸுலபமாக இதின் மூலமாய் அறிந்து கொள்ளலாம். இது ஓர் சிறிய கருவி யாகையால், இதனைச் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளலாம்.

இதன் விலை ரூபாய் 2.

விலாசம் :—

ஈஸ்ட் இண்டியா நாவல்டி ஸ்டோர்ஸ்,
19-வது பீட், சௌக்கார்பேட்டை, சென்னை.

சம்சார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜ்பூந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறாமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் திரப்பியாசங்களினால் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா **|**-க்கு ரூ. **2** வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,

நே. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதுராஸ்।



"Collapsible" Key Ring.

A Key Ring that does not buldge the pocket.

PRICE 0-3-0 each.

Rs. 2-0-0 per doz.

K. S. MUTHIAH & Co., Tinnevelly.

அமிர்தாஞ்சன்

நோய்களைப் போக்கவல்ல சிறந்த சாதனம்

1924 காலண்டர் **1924**

மூன்று நிறங்கள் கொண்ட ஆப்டோன்

மகாத்மா

காந்தி படம்

தபாற் செலவு உள்பட தனிப்பிரதி அணு **6.**

மொத்த வர்த்தகர்களுக்கு **25** பிரதி ரூ. 4 8 0

,, 100 ,, ,, 15 0 0

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்து விடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர்ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்.

நம்பிக்கையுள்ள

வர்த்தகஸ்தலம்.

கம்பெனி

ஸ்தாபித்த வருஷம் 1900.

கராச்சி பட்டுப்

புடவைகள்.

தற்கால நாகரீகத்திர்க்கேற்றது. அழகான சரிகைக்கரைகள். சகல விதமான கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1, 18 முழ புடவை 1க்கு ரூ. **55.**

நெ. 2, ,, ,, ரூ. **45.**

கராச்சி ரவிக்கை 1க்கு ரூ. 3-8.

பெரிய கேட்லாக் இனம்.

கே. எஸ். முத்தையா கோ.,

சில்க் அவுஸ், காசி.

பிராஞ்சுகள் : சென்னை, திருநெல்வேலி.

Printed by M.A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.